Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 21, 2022

திங்கட்கிழமை நவம்பர் 21, 2022 | ஒளி: 08 கதிர்: 147 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

## 56,000 குழந்தைகளுக்கு போஷாக்கு குறைபாடு



இலங்கையில் உள்ள சுமார் 56,000 குழந்தைகள், கடுமையான போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அவசர சிகிச்சை தேவைப்படுவதாகவும் யுனிசெப் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

ஓமானில் பிரசித்த ஏல விற்பனையில்

# இளம் யுவதிகளை விற்றவர் கைது

டி.கே.பி.கபில



இலங்கையைச் சேர்ந்த இளம் யுவதிகளை, சுற்றுலா விசாவின் ஊடாக, ஓமானுக்கு அழைத்துச் சென்று, அங்கு கோடீஸ்வரர்களுக்கு விற்பனை செய்து, மனித கடத்தல்களில் ஈடுபட்டவர் என குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேகநபர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, சனிக்கிழமை (19) கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் பிரகாரம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டார்.

44 வயதான இவர், மொஹமட் ரிஷ்வி மொஹமட் என அடையாளம் காணப்பட்டார். அவர், வத்தளை மற்றும் தெஹிவளையில் இரண்டு மனைவிகளுடன் வாழ்ந்து வருகின்றார் என்றும் அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

ஓமான் ஆட்கடத்தல் விவகாரம்:

# துஷ்யந்த் வீரமனும் மனைவியும் சீ.ஐ.டியில் முறைப்பாடு

ஓமான் ஆட்கடத்தல் விவகாரம் குறித்து முறைப்பாடு பதிவு செய்வதற்காக பிரபல கலைஞர் துஷ்யந்த் வீரமன் மற்றும் அவரது மனைவியான ஸ்டெபானி சிறிவர்தன ஆகியோர், குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு நேற்று (20) வருகை தந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு மற்றும் குடிவரவு அதிகாரிகளால் சனிக்கிழமை (19) கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதவானினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட சிலருக்கு எதிராக அவர்கள் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

துஷ்யந்த் வீரமனின் வீட்டில் சில காலம் பணியாற்றிய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்ட நபரின் சட்டவிரோத நடவடிக்கையால் பாதிக்கப்பட்டதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேலைக்காக பதிவு செய்யும் நபர்கள், சுற்றுலா விசாவில் அனுப்பப்பட்டு ஓமான் உள்ளிட்ட நாடுகளில் விற்கப்படுவதாக, முறைப்பாடளித்ததன் பின்னர் துஷ்யந்த இவ்வாறு தெரிவித்தார்.

தங்களுக்குத் தெரிந்த ஒருவரும் இந்த மோசடியில் சிக்கியதாகவும் அதிர்ஷ்டவசமாக, அவரை மீட்பதற்கு தங்களுக்கு உதவி கிடைத்ததாகவும் குறிப்பிட்டார்.

பிரபல பாடகர் துஷ்மந்த் வீரமனின் மனைவியும் பிரபல மொடலும் அறிவிப்பாளருமான ஸ்டெபானி சிறிவர்தன ஆகியோர் ஓமானில் பாதிக்கப்பட்ட பெண்ணை சீ.ஐ.டிக்கு அழைத்து வந்திருந்தனர்.

ருமேனியாவில் வேலை வழங்குவதாக

## நேர்காணல் நடத்திய நால்வர் சிக்கினர்



ருமேனியாவில் வேலை வழங்குவதாக சமூக வலைத்தளங்கள் மூலம் விளம்பரம் செய்து, நேர்காணல் நடத்திய வெளிநாட்டவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உயர் அதிகாரியொருவர், நேற்று (20) தெரிவித்தார்.

பதுளை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேர்காணல் நடத்திய போதே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கிளைபோசைட் தடையை நீக்குவதற்கு தீர்மானம்



ஏழு வருடங்களுக்குப் பின்னர், கிளைபோசைட் மீதான தடையை நீக்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தடையை நீக்குதற்கான வர்த்தமானியில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கையொப்பம் இட்டுள்ளதாகவும் அதனை அச்சிடுவதற்காக அரசாங்க அச்சக திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்தார்.

கிளைபோசைட் தடை குறித்து, விவசாயப் பிரதிநிதிகள், வல்லுநர்கள், உள்ளிட்ட பல்வேறு துறையினரிடம் கேட்டறிந்த பின்னர் தடையை நீக்க அமைச்சர் மஹிந்த அமரவீரவால் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## நாடு திரும்பினார் பசில் ராஜபக்ஷ



முன்னாள் நிதியமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக, நேற்று (20) காலை நாடு திரும்பினார்.

வெளிநாடு செல்வதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியதை அடுத்து, மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக செப்டெம்பர் மாதம் அமெரிக்காவுக்கு சென்றிருந்த அவர், நேற்று நாடு திரும்பினார்.

தொடர்ச்சி P2



## மன்னாருக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னார் மாவட்டத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை நேற்று (20) மேற்கொண்டார்.

மன்னார் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்வதும் அந்தப் பிரச்சினைகளுக்கு வழங்கக் கூடிய தீர்வுகள் குறித்து கலந்துரையாடுவதுமே ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

தொடர்ச்சி P2

## பஸ் டிக்கெட் வழங்க தானியங்கி முறை

### இலங்கை மத்திய வங்கி அனுமதி



பஸ் பயணச்சீட்டுகளை (டிக்கெட்டு) வழங்குவதற்கு புதிய தானியங்கி முறையை அறிமுகப்படுத்தும் முன்மொழிவுக்கு இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் தங்களது வங்கிகளின் வரவு அல்லது கடன் அட்டைகள் மூலம் பஸ் கட்டணத்தை செலுத்தும் வகையில் முறைமை அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## பொலிஸ் அதிகாரிகளை கட்டியணைத்தது ஏன்?

### காரணம் சொல்கிறார் ஹிருணிகா



பொலிஸ் அதிகாரிகளைக் கட்டிப்பிடித்தாக தான் குற்றம் சாட்டப்பட்டதாகவும் ஆனால் தான் கட்டிப்பிடித்த போது, தன்னை அவர்கள் ஒதுங்கச் சொல்லவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

43 இலட்சம் மாணவர்களின்

## எதிர்பார்ப்பை தகர்த்து எறிந்த பட்ஜெட் உரை



வரவு செலவுத் திட்ட உரையை பார்வையிட வருகை தந்த பாடசாலை மாணவர்கள் உட்பட 43 இலட்சம் பாடசாலை மாணவர்களின் எதிர்பார்ப்பை இந்த வரவு செலவுத் திட்ட உரை தகர்த்தெறிந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## விடுதலைக்கு பிறகும் போராட்டம்: திருச்சி முகாமில் உண்ணாவிரதம்




இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில், விடுதலை செய்யப்பட்டவர்கள் திருச்சியில் உள்ள இலங்கை தமிழர்களுக்கான முகாமில் தங்களுக்கு வேறோர் அறையை ஒதுக்க வலியுறுத்தி, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களில் ரோபர்ட் பயஸ் என்பவர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்.

1991 ஆம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, தற்கொலை குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தொடர்ச்சி P3

## மாதம் ஒருமுறை விலைத் திருத்தம்



டிசெம்பர் மாதம் முதல் எரிபொருட்களின் விலைகளை மாதாந்த அடிப்படையில் திருத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். பெற்றோலிய விநியோகஸ்தர்களின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இளம் யுவதிகளை விற்றவர் கைது

அவரினால், கொழும்பு மருதானை பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் அனுமதியற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் ஊடாக இளம் யுவதிகளை அவர், ஓமானுக்கு சுற்றுவா வீசாவில் அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் மூன்றாவது செயலாளர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டே இந்த மனித கடத்தல்களில் அவர் ஈடுபட்டுள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அபுதாபி, டுபாய் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளின் நகரங்களுக்கு விமானத்தின் ஊடாக சுற்றுலா வீசாவில் அனுப்பிவைக்கப்படும் இலங்கையைச் சேர்ந்த இளம் யுவதிகள், அங்கிருந்து பஸ்களின் ஊடாக ஓமான் நாட்டின் எல்லைகளுக்கு அழைத்துச்சென்று, அங்கு இடம்பெறும் பிரசித்த ஏல விற்பனையில், யுவதியொவர் 10 இலட்சம் முதல் 25 இலட்சம் வரையிலும் விற்பனைச் செய்யப்படுகின்றார்.

அதுமட்டுமன்றி விபசாரத்தில் ஈடுபடுத்தும் கும்பல் மற்றும் ஏனைய முறைக்கேடான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் இளம் யுவதிகள் விற்பனைச் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஓமானுக்கு விரைந்துள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சிலர் அங்கு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கும் மனித கடத்தல் வர்த்தகம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மனித கடத்தலில் சிக்கிக்கொண்ட பெரும்பாலான இளம் யுவதிகள், அபுதாபி, டுபாய் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களால் நடத்தப்படும் தடுத்துவைக்கும் மத்திய நிலையங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சிக்கிக்கொண்டவர்களை நாட்டுக்கு அழைத்து வந்ததன் பின்னர், சந்தேகநபருக்கு எதிராக பல முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சந்தேகநபர், சனிக்கிழமை (19) அதிகாலை 12.55 மணிக்கு, டுபாயில் இருந்த வந்த ப்ளைய் டுபாய் விமானச் சேவையின் எப்.இஸட் 569 ஆம் இலக்க விமானத்தில் கட்டுநாயக்கவை வந்திறங்கியதும் கைது செய்யப்பட்டார்.

அவரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன பொலிஸார் தெரிவித்தனர்.

# 56,000 குழந்தைகளுக்கு போஷாக்கு குறைபாடு

நாட்டிலுள்ள 22 இலட்சம் குழந்தைகளுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாகவும் 4.8 மில்லியன் குழந்தைளுக்கு கல்விக்கான அணுகல் கிடைக்க வேண்டும் எனவும் யுனிசெப் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

6.2 மில்லியன் மக்கள் மிதமான உணவுப் பற்றாக்குறையாலும், 66,000 பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை உணவுப் பாதுகாப்பின்மை மோசமடையும் எனவும் அறிக்கை தெரிவிக்கிறது. இலங்கையில் உள்ள ஒவ்வொரு 5 குடும்பங்களிலும் 2 குடும்பங்கள் தமது மாதாந்த சம்பளத்தில் 75 வீதத்தை தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்ய செலவிடுவதாகவும் அந்தக் குடும்பங்கள் கல்வி மற்றும் சுகாதாரத்துக்காக மிகக் குறைந்தளவு நிதியையே செலவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பணவீக்கம் காரணமாக பெரும்பாலான குடும்பங்கள்

தங்களது சேமிப்பில் பெரும்பகுதியை செலவழித்துள்ளதாக சுட்டிக்காட்டும் அறிக்கை, அந்த குடும்பங்கள் தங்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் கடும் சிக்கலை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டுகிறது. பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக 2022ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 286 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

# நேர்காணல் நடத்திய நால்வர் சிக்கினர்

சமூக வலைத்தளங்கள் மூலம் செய்யப்பட்ட விளம்பரத்துக்கு அமைய நேற்று (20) காலை குறித்த தனியார் ஹோட்டலில் நேர்காணல் நடத்தப்பட்டுள்ளதுடன், அதில் பங்கேற்போர் தலா 5 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இடத்தில் பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் வெளிநாட்டவர் உட்பட நால்வரைக் கைது செய்துள்ளனர்.

இந்த நேர்காணலில் சுமார் 25 பேர் கலந்து கொண்டதாக குறிப்பிட்ட அதிகாரிகள், வேலை வாய்ப்புக்கு 15 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் முதலில் 5 இலட்சமும் இரண்டு தவணைகளில் 10 இலட்சத்தையும் செலுத்த முடியும் என அவர்கள் தெரிவித்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# மன்னாருக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்



மன்னார் நகருக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மன்னார் ஒல்லாந்து கோட்டையின் புனரமைப்பு பணிகள் தொடர்பாக முதலில் ஆராய்ந்தார்.

அதன் பின்னர், நடுக்குடா மீனவ கிராமத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, மீனவ சமூகத்தவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியதுடன், அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

நடுக்குடா மீனவ கிராம மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டதோடு , அது தொடர்பில் துரிதமாக ஆராய்ந்து தேவையான தீர்வுகள் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

மன்னார் காற்றாலை மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரதேசத்தையும் ஜனாதிபதி அவதானித்ததுடன் காற்றாலை மின் நிலையத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்ததுடன் அப்பகுதி மக்களின் பிரச்சினைகளை கேட்டறியத் தவறவில்லை.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்சக்தி வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்டோரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

# மாதம் ஒருமுறை விலைத் திருத்தம்

எரிபொருட்களின் விலைகளை மாதாந்த அடிப்படையில் திருத்துவதற்கான பிரேரணையை இன்று (21) அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மாதத்தின் 1ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் எரிபொருள் விலைத் திருத்தம் அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில், இந்த மாத ஆரம்பத்தில் எரிபொருள் முற்பதிவுகளை மேற்கொள்ள விற்பனையாளர்கள் தாமதத்தித்திருந்தனர்.

இதனையடுத்து, விலைகள் திருத்தப்படாது என்று அமைச்சர் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய முற்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அதன்பின்னர், கடந்த 11ஆம் திகதி டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகள் திருத்தப்பட்டதுடன், 15ஆம் திகதி விலைத் திருத்தம் அமுலாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், எதிர்காலத்தில் எரிபொருள் ஒதுக்கீட்டைத் தவிர்த்து சாதாரணமாக எரிபொருளை விநியோகிக்க ஆரம்பித்ததும், நாளாந்த அடிப்படையில் எரிபொருள் விலையை திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# கிளைபோசைட் தடையை நீக்குவதற்கு தீர்மானம்

2015 ஆம் ஆண்டு முதல் தடவையாக இலங்கையில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகளை அறிமுகப்படுத்தாமல் கிளைபோசேட் தடை செய்யப்பட்டதுடன், 2018ஆம் ஆண்டு தேயிலை மற்றும் இரப்பர் ஆகிய பயிர்களுக்கு கிளைபோசைட் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் டிக்கெட் வழங்க தானியங்கி முறை

நடத்துநர் இல்லாமல் பஸ்கள் இயக்கப்படும் என்பதால் அவற்றின் பின்பக்க கதவு மூடப்பட்டிருக்கும் என்றும் பயணிகள் தாங்கள் உள்ளே வரும் இடத்திலிருந்து பொருத்தப்பட்டிருக்கும் புதிய சாதனங்களில் தங்களது வங்கி அட்டைகளை செலுத்த வேண்டும் என்றார்.

பஸ்களில் ஜிபிஎஸ் அமைப்பை அணுகும் திறன் கொண்ட புதிய



மின்னணு சாதனங்கள் பொருத்தப்படும் என்றும் அவற்றின் மூலம் கட்டணம் அறவிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

வங்கி அட்டை இல்லாத பயணிகள், சாரதிக்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் பஸ் கட்டணத்தை பணம் மூலம் செலுத்தமுடியும் எனவும் தெரிவித்தார்.

பஸ் உரிமையாளரின் அனுமதியுடன் சாரதி தமக்கு தேவையான உதவியாளரை வைத்திருக்க முடியும் என்றும் தெரிவித்த அவர், புதிய சாதனங்களை வழங்குவதற்கு மத்திய வங்கி ஏற்பாடு செய்யும் என்றார்.

# எதிர்பார்ப்பை தகர்த்து எறிந்த பட்ஜெட் உரை

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜாஎல தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் சனிக்கிழமை மாலை (19) கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலுவான எதிர்காலத்தை உருவாக்க நாட்டின் ஆட்சியாளர்கள் ஊக்கம் அளிப்பார்கள் என்றே மாணவர்கள் நம்பினர் எனவும், தங்களுக்கு மதிய உணவு வழங்க நிதி ஒதுக்கப்படும் என்று எதிர்பார்த்த போதும் அது அவ்வாறு நடக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைப் புத்தகப் பைகள், கொம்பஸ் பெட்டிகள் உட்பட அனைத்துப் பாடசாலை சிறுவர்களுக்கும் தேவையான பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ள நேரத்தில், அவர்களின் எதிர்காலம் பற்றி சிந்திக்காமல் இந்நாட்டை ஆட்சி செய்யும் பொருளாதாரக் கொலைகாரர்கள், நாட்டை சீரழித்துக் குவித்தவர்கள் அமைச்சுச் சலுகை வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்கின்றனர் எனவும் தெரிவித்தார்.



இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் மற்றும் கருவில் இருக்கும் குழந்தை முதல் கர்ப்பிணித் தாய்மார்கள் வரை சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருந்து மேல்மட்டத்திலுள்ள அனைவரும் ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைக் கல்வியை சீர்குலைத்து இந்நாட்டில் முட்டாள்களின் கூட்டத்தை உருவாக்கவே இந்த அரசாங்கம் நினைக்கிறது எனவும் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக வீதிகளுக்கு கோடிக்கணக்கில் பணம் ஒதுக்குவதற்கு முன்னர், பாடசாலைக் கல்வியை வலுப்படுத்தவும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்குணவுப் பொதி வழங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

ஆனால் இந்த அரசாங்கம் மக்கள் படும் இன்னல்களை புரிந்து கொள்ளவில்லை எனவும் மக்களின் துன்பங்களை புரிந்து கொள்ளும் மனிதாபிமான மிக்க அரசாங்கமும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் அரசாங்கமுமே இந்நாட்டுக்கு தேவை எனவு ம் சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் மக்களின் விருப்பத்தின் பிரகாரமைந்த பொது மக்கள் ஆட்சியை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி பாடுபடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடு திரும்பினார் பசில் ராஜபக்ஷ

அவரை வரவேற்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் விமான நிலைய நிலைய சிறப்பு விருந்தினர் பகுதிக்கு வந்திருந்தனர்.

ரோஹித அபேகுணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காமினி லோக்குகே, பவித்ரா வன்னியாராச்சி, சாந்த பண்டார உள்ளிட்ட பல எம்.பிக்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

கட்சியை முன்னேற்றுவதற்கும் கட்சியின் எதிர்கால பணிகளுக்காகவும் பசில் ராஜபக்ஷ நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக விமான நிலையத்துக்கு வெளியே குழுமியிருந் ஊடகவியலாளர்களிடம் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கருத்து வெளியிட்டார்.

பசிலின் இருப்பு கட்சிக்கு பலம் சேர்ப்பதாகவும் கிராமங்கள் தோறும் சென்று வாக்குச் சேகரிக்க ராஜபக்ஷர்கள், எம்.பிக்களுக்கு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.



# பொலிஸ் அதிகாரிகளை கட்டியணைத்தது ஏன்?



பத்திரிகை நிறுவனத்தில் நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை ஹிருணிக்கா குறிப்பிட்டார்.

தமக்கு இருக்கும் அதே பிரச்சினை அவர்களுக்கும் உள்ளதாகவும் குண்டாந்தடிகள் மற்றும் ஏனைய ஆயுதங்களுடன் வரும் பொலிஸாரை அமைதியான முறையில் தடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

போராட்டத்தின் போது பொலிஸ் அதிகாரிகளை ஹிருணிகா பிரேமச்சந்திர கட்டிப்பிடிப்பது அவர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் தந்திரோபாயமாக இருந்ததாக கறுவாத்தோட்ட பொலிஸாருடன் ஆஜரான உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா நீதிமன்றில் அறிவித்திருந்தார். கொழும்பு 7 இல் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஹிருணிக்கா உள்ளிட்ட 15 பேர் கடந்த திங்கட்கிழமை (14) கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பல சந்தர்ப்பங்களில், கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகளை கட்டிப்பிடிப்பதை ஹிருணிகா பிரேமச்சந்திர வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும் இது அவரது செயற்பாட்டு முறை (குற்றவியல் நடத்தை முறை) என பொலிஸார் நம்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

# ஆதனவரி அறவீட்டு அழுத்தத்தை நிறுத்தவும்

■ மு.தமிழ்ச்செல்வன்

ஆதனவரி அறிவீடு செய்வதற்காக, மக்கள் மீது அழுத்தத்தை திணிக்க வேண்டாம் என கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் கட்சியின் உறுப்பினர் இ. இளங்கோ கோரியுள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில், அதிகரித்துள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையேற்றம் காரணமாக மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இந்நிலையில், ஆதனவரியை செலுத்துமாறு கரைச்சி பிரதேச சபை அழுத்தம் கொடுப்பது மக்களை மேலும் நெருக்கடிக்குள் உள்ளாக்குவதாகும். எனவே இச் செயற்பாட்டினை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

கரைச்சி பிரதேச சபையில் அதிகரித்த ஆதன வரி தொடர்பில் நாம் தொடர்ந்தும் எமது ஆட்சேபனையையும் எதிர்ப்பினையும் தெரிவித்து வருகின்றோம்.

கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களில் ஒரு குறிப்பிட்ட சொற்ப சதவீத மக்களை தவிர பெரும்பாலானவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடுடையவர்களாக இல்லை.

எனவே, மக்கள் அவ்வாறான நிலையில் இருக்கும் போது, அந்த மக்களிடம் ஆதனவரியை செலுத்துமாறு நிர்ப்பந்தம் செய்வதும் இக்கால சூழலில் மிகவும் பொருத்தமற்ற செயற்பாடாகும் என்றும் தெரிவித்தார்.

மூவேளை உணவுக்கே தினமும் போராடுகின்ற நிலையில் மக்கள் உள்ள போது, அவர்களை நாமும் நெருக்கடிக்குள் தள்ளவிடக் கூடாது



எனத் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது அனைத்து வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றார்.

புதிய, புதிய வரிகள் மக்கள் மீது சுமத்தப்பட்டுகின்றன. இந்த நிலையில் கரைச்சி பிரதேச சபையும் தனது அதிகரித்த ஆதனவரியை செலுத்துமாறு மக்களை நிர்ப்பந்தம் செய்வதனை நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.




விடுதலைக்கு பிறகும் போராட்டம்:

# திருச்சி முகாமில் உண்ணாவிரதம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடையவர்கள் எனக்கூறி பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ரவிச்சந்திரன், ரோபர்ட் பயஸ், ஜெயக்குமார் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம் கைதான 7 தமிழர்களுக்கு தூக்கு தண்டனை வழங்கியது. 2014 ஆம் ஆண்டு 7 தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. இந்த நிலையில் 7 பேரையும் விடுதலை செய்யக்கோரி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிறப்பு முகாம் இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டது. இதனை தொடர்ந்து சிறையில் இருந்து நளினி உள்ளிட்ட 6 பேரும் விடுவிக்கப்பட்டனர். இதில் தமிழ்நாட்டை சேர்ந்த நளினியும் ரவிச்சந்திரனும் விடுவிக்கப்பட்ட நிலையில், இலங்கை தமிழர்களான முருகன், சாந்தன், ரோபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் திருச்சியில் உள்ள முகாமில் அடைக்கப்பட்டனர்.

இந்தநிலையில் திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் சிறப்பு முகாமில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஜெயக்குமார், ரோபர்ட் பயஸ், ஆகியோர் தங்களுக்கு வேறோர் அறையை ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால், இதுவரை அறை ஒதுக்கப்படாமல் இருந்ததாக கூறப்படுகிறது.

இதனை வலியுறுத்தி 2 நாள்களுக்கு முன்பு ஜெயக்குமார், ரோபர்ட் பயாஸ் ஆகிய இருவரும் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். இதில் ஜெயக்குமாரின் உடல் சோர்வு ஏற்பட்டு மூச்சு திணறி மயங்கி விழுந்தார். அவரை உடனடியாக திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். திருச்சி அரசு மருத்துவமனையில் பொலிஸார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரோபர்ட் பயஸ் சிறப்பு முகாமில் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இதனை அடுத்து மாநகர பொலிஸ் துணை ஆணையாளர் ஸ்ரீதேவி, திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்வையிட்டார்.

இது ஒருபுறம் இருக்க, ஏற்கெனவே சிறையில் பல்வேறு குற்ற வழக்குகளில் உள்ள இலங்கை தமிழர்கள் தங்களை விடுவிக்க கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# 3.5 பில்லியன் பேர் வாய் புற்றுநோய்க்கு உள்ளாகியுள்ளனர்



உலகளவில் 3.5 பில்லியன் மக்கள் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 380,000 பேர் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டு உள்ளதுடன், வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களில் முக்கால்வாசி பேர் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் வாழ்கின்றனர் என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

அத்துடன் முழுமையாக பற்கள் வீணாவதற்கு பிரதான காரணமாக ஈறு நோயால் பில்லியன் கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் பொதுவான நோயாக காணப்படும் பற் சிதைவு நோயால் 2.5 பில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 194 நாடுகளின் தரவுகளின்படி, கடந்த 30 ஆண்டுகளில் பற்சிதைவு நோயாளர்களின் எண்ணிக்கை 1 பில்லியனாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின்

# 14 ஆவணப்படங்கள் திரையிடல்

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (22.11.2022) யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் ஒரு மணியளவில் திரையிடப்பட உள்ளன.

இந்த ஆவணப்பட விழாவில் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகின்ற பதினான்கு ஆவணப்படங்கள் திரையிடப்படுகின்றன.

இந்த ஆவணப்பட விழாவில் ஆனையிறவு உப்பளத்தின் தற்போதைய நிலை சொல்லும் 'கடல்விளை அமுதம்', மலையகக் கிராமமொன்றின் விளையாட்டு மைதானத் தேவையைப் பற்றிப் பேசும் 'மைதானம்', நீர்வேலி வாழை உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிப் பேசும் 'வாழைக்குலைச் சங்கம்', சூழல் மாசடைவதை ஏதோ ஒரு வகையில் குறைக்கும் வண்ணம் பழமையை வழமைக்கு கொண்டுவரும் சிறிய முயற்சி பற்றிப் பேசும் 'மிதியுந்து' ஆகியன திரையிடப்படும்.

அத்துடன், சிற்பக்கலையில் அருகி வரும் உளிப்பயன்பாடு மற்றும் அதிகரித்து வரும் இயந்திரங்களின் பயன்பாடு பற்றிப் பேசும் 'உளி தொடாக்க லை', வழக்கொழிந்து போயிருக்கும் சூத்திரக் கிணறு நீர்ப்பாசன முறை பற்றிப் பேசும் 'அழிவடைந்து போன பழமை', ஆழக்கடலின் ஆபத்து அறியாது அதில் நீராடச்சென்று மரணித்துப்போன மூன்று சகோதரர்களின் கதை சொல்லும் 'செம்மலையின் கண்ணீர்',

> **'கடல்விளை அமுதம்', 'மைதானம்', 'வாழைக்குலைச் சங்கம்', 'மிதியுந்து', 'உளி தொடாக்க லை', 'அழிவடைந்து போன பழமை', 'செம்மலையின் கண்ணீர்', 'வன்னியின் ஆவுடையூர்', 'பற்றிக்' 'வானவில்', 'நந்திக்கடல் மீன்பிடி', 'அம்மா', 'மறைந்திருக்கும் தொன்மம்', 'இருளொளி', 'தூய மரச்செக்கு எண்ணெய்' ஆகிய படங்கள் திரையிடப்பட உள்ளன**

ஆகிய ஆவணப்படங்களும் திரையிடப்படும்.

மரபு ரீதியான கால்நடை வளர்ப்பு மூலமான தற்கால தன்னிறைவுப் பொருளாதாரம் நோக்கிய நகர்வு பற்றிப் பேசும் 'வன்னியின் ஆவுடையூர்', நீடித்த வனையுடனான பலவர்ண 'பற்றிக்' உள்ளூர் உற்பத்தி பற்றிப் பேசும் 'வானவில்', நந்திக்கடல் மீன்பிடியின் தற்போதைய நிலை பற்றிப் பேசும் 'நந்திக்கடல் மீன்பிடி',

மலையகப் பெண்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் வாழ்வியற் சிக்கல்களைச் சொல்லும் 'அம்மா', வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக இருந்து இன்று சிதைவடைந்திருக்கும் கீரிமலை வெளவால் புறாக்குகையின் கதைசொல்லும் 'மறைந்திருக்கும் தொன்மம்', மாற்றுத்திறனாளிக் கலைஞர் ஒருவரின் கலைத்துறைப் பயணம் பற்றிப் பேசும் 'இருளொளி', தமிழர்களின் பாரம்பரிய இயந்திரப் பொறிமுறை பற்றிப் பேசும் 'தூய மரச்செக்கு எண்ணெய்' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்பட உள்ளன.

# துப்பாக்கிச் சூட்டுடன் காட்டு யானை மீட்பு

■ முஹம்மது முஸப்பிர்

கருவலகஸ்வெவ, 7 ஈம் கட்டை, பலடாகம வயல் பகுதியில் காட்டு யானையொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் மீட்கப்பட்டதள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் மிருக வேட்டையில் ஈடுபடுபவர்களாலேயே இக்காட்டு யானையின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகம் தெரிவிவித்துள்ளனர்.

கருவலகஸ்வெவ பிரதேச வன அதிகாரிகள் மற்றும் அநுராதபுரம் கால்நடை வைத்திய அலுவலகத்தின் வைத்தியர் இசுரு ஹேவகோட்டகே ஆகியோரால் அந்த யானைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் காட்டு யானையின் தலையில் சுமார் 9 சூட்டுக்காயங்கள் காணப்படுவதாக வனவிலங்கு வைத்தியர் தெரிவித்துள்ளார்.

25 வயதான இக் காட்டு யானையின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அந்த வைத்தியர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பௌதீக திட்டம் கையளிப்பு




எதிர்வரும் 25 வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள உத்தேச தேசிய பௌதீக திட்டம் கடந்த (18ஆம் திகதி) இலங்கை அபிவிருத்தி நிர்வாக பயிற்சி நிறுவனத்தில் அமைச்சுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அமைச்சுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் குழுவில் 18 அமைச்சுக்களின் செயலாளர்கள், 9 மாகாண செயலாளர்கள் மற்றும் நான்கு அரச திணைக்களங்களின் நான்கு பணிப்பாளர் நாயகம் உள்ளனர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் இந்த அமைச்சுக்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருக்கிறார்.

அமைச்சுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்ற பின்னர் தேசிய பௌதீக திட்டம் அடுத்த மாதம் தேசிய பௌதீக வடிவமைப்பு சபையிடம் சமர்ப்பிக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க துணைத் தலைவராக உள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் அனைத்து அரச நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து இந்த தேசிய பௌதீக திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய பௌதீக திணைக்களம் என்பது நம் நாட்டிற்கான தேசிய பௌதீகக் திட்டத்தைத் தயாரிக்கும் நிறுவனமாகும்.

# ஓட்டோ பதிவுக்கு ரூ.500 கட்டணம்

ஓட்டோக்களுக்கான அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்வதற்காக ஓட்டோக்களை பதிவு செய்வதற்கு 500 ரூபாயை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

பதிவு தொடர்பான ஆவணங்களுக்காக இந்தத் தொகை அறவிடப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

ஏறக்குறைய 25,000 ஓட்டோக்கள் எரிபொருள் கோட்டாவைப் பெறுவதற்கு பதிவு செய்துள்ளதாகவும், அதிகரிக்கப்பட்ட எரிபொருள் கோட்டா இன்று (21) முதல் கிடைக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அமைப்பாளருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல்

■ கனகராசா சரவணன்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், அவரது குழந்தைகள், மனைவி உட்பட குடும்பத்துடன் ஒரு மாத்தில் கொல்லப்படுவார்கள் எனக் கடிதமூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், "இவ்வாறான அச்சுறுத்தல் மூலம் என்னையும் எங்கள் செயற்பாட்டாளர்களையும் பின்வாங்க செய்வது பகற்கனவாகும்" என கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், வீட்டில் நேற்று (20) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகச் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு தரவை துயிலும் இல்லத்தில் சனிக்கிழமை (19) பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து சிரமதான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன் அப்போது எனது வீட்டுக்கு தபால் மூலம் கொலை அச்சுறுத்தல் கடிதம் ஒன்று கிடைத்துள்ளதாக எனது மனைவி தெரிவித்தார் என்றார்.

# சிறைகளில் நெரிசலைத் தடுக்க அவசர நடவடிக்கைகள் தேவை

ஐஸ் போதைப்பொருள் பயன்படுத்தும் சந்தேக நபர்களின் விளக்கமறியல் நாளாந்தம் அதிகரிப்பதாலும் இலங்கையிலுள்ள சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும், சிறைச்சாலைகளில் நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், அவற்றை சீர்செய்வதற்கு அவசர நடவடிக்கைகள் தேவையென நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அபின் மற்றும் விஷ போதைப்பொருள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம் ஐஸ் போதைக்கு அடிமையான 400 பேர் தினமும் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வாகநேரி விவசாயக் கண்டங்களில்

# இரவில் மண் அகழ்வு

## மக்கள் ஒன்று சேர்ந்து பாரிய ஆர்ப்பாட்டத்துக்கு முஸ்தீபு

■ ஆர். ஜெயஸ்ரீராம்

வாகநேரி நீர்பாசன திட்டத்தின் கீழ் உள்ள விவசாயக் கண்டங்களில், சட்டவிரோத மண் அகழ்வுகள் இரவு வேளைகளில் இடம்பெற்று வருவதை தடுத்து நிறுத்தாமல் பாராமுகமாக இருக்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராக, மக்கள் ஒன்று சேர்ந்து பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

வாகநேரி பிரதேச விவசாயக் கண்டங்களில் இடம்பெறும் மண் அகழ்வால், பாதிக்கப்பட்ட பாலங்கள், வாய்க்கால்கள், வீதிகள், மணல் சேகரிக்கப்படும் இடங்களை நேரில் பார்வையிட்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது; பயிர்களை பாதுகாக்கும் வேலிகளே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. வனத்துறையினருக்கு சொந்தமான காணியில் மண் சேமிக்கப்பட்டு கடத்தப்படுகின்றது. இதன் பின்னணியில் வனத்துறையும் உள்ளதா? மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டங்கள் நடைபெறாமல் இருப்பதற்கான காரணம், இவ்வாறான விடயங்கள் வெளியில் வரும் என்னும் பயமாகும்.

அடுத்ததாக, இங்குள்ள அரசியல்வாதிகள் தமது அரசியல் சுயலாபம் கருதி தமிழ், முஸ்லிம் என பாகுபாடுகாட்டி, மக்களை பிரித்துவிட்டு இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கமாக பிரித்து, மக்களுக்கு சொந்தமான வளங்களைச் சுறையாடுகின்றனர். இந்நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்; அல்லாதுவிடில், எமது மக்களும் எதிர்கால சந்ததியும் நிர்க்கதியாகுவது வெகு விரைவில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

# “பணத்துக்கான நாடகம்”

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை நோக்கி பேசிய பொலிஸ் அதிகாரி

■ க. அகரன்



வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது போராட்டம் 2,100 ஆவது நாளை எட்டிய நிலையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக 2,100 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மார் நேற்று முன்தினம் (19) போராட்டம் மேற்கொள்ளும் போராட்ட பந்தலுக்கு முன்பாக 12 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“எமக்குத் தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால், வெளிநாடுகளின் தலையீடு அவசியம். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வந்து எமக்கு உதவி செய்து, இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும். நாங்கள் வெளிநாட்டின் தலையீட்டையே நம்பி இங்கிருந்து போராடி வருகின்றோம்” எனப் போராட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வவுனியாவுக்கு வருகை தந்தபோது, வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கறுப்பு கொடிகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, வெளிநாட்டு ஊடகங்களுக்கும் காசுக்காகவும் நாடகம் போடுகின்றார்கள் என தமிழ் பொலிஸ் அதிகாரி, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை நோக்கி கூறியமையால் தாய்மார் கடும் கோபமடைந்தனர்.

அங்கிருந்த தமிழரான உபபொலிஸ் பரிசோதகர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை பார்த்து, “நீங்கள் வெளிநாட்டு ஊடகங்களுக்கும் காசுக்காகவும் நாடகம் போடுகின்றீர்கள்” எனத் தெரிவித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், “நீ ஒரு தமிழனாக இருந்துகொண்டு, இவ்வாறு தெரிவிப்பது தவறு; உங்களைப் போன்றோரே எமது இனத்தின் துரோகிகள். இராணுவ அறிவித்தலுக்கு இணங்கி, பிள்ளைகளை நம்பி ஒப்படைத்து, இன்று பறிகொடுத்த எமக்குத்தான் அதன் வலி தெரியும்” எனக் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை நோக்கி கூறினர்.

# ‘வாரத்துக்கு ஒரு நாள்’ டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்



■ நூருல் ஹுதா உமர்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் டெங்கு அதிகமாகப் பரவுவதால், ‘வாரத்துக்கு ஒரு நாள்’ டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு அமைய, பள்ளிக்குடியிருப்பு 1ம், 2ம் பிரிவுகளில், அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம் ஏ றாசிக் தலைமையில் வீடுகள் மற்றும் பொது நிறுவனங்கள் கண்காணிக்கப்பட்டன. இதன்போது, டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் அடையாளம் காணப்பட்ட வீடுகள், காரியாலயங்கள் என்பன துப்புரவு செய்யப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்தனர்.

டெங்கு பரவலில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக, ஒவ்வொரு வாரமும் எல்லா வட்டாரங்களிலும் இதே போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. எனவே, வீடுகள், பொது நிறுவனங்களை துப்புரவு செய்து வருகின்ற அதிகாரிகளுக்கு, சிரமங்களை ஏற்படுத்தாதவாறு நடந்து கொள்ளுமாறு பொதுமக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான ரீ.எம் ஐய்யுப், ஏ.ஜி.எம் பர்சாத், எம். சஹாப்தீன், கல்முனை பிராந்திய தொற்று நோய்ப் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ. சீ.எம் பசால், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எப். எம். ஏ காதர், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். எம் அன்சார், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள், இராணுவத்தினர், வட்டாரங்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# “நீரிழிவு நோயின் தாக்கம் பாரதூரமானது”

## டொக்டர் கே. அருளானந்தம்

■ எம். எஸ். எம் நூர்தீன்

2021ஆம் ஆண்டில் மட்டும் 6.7 மில்லியன் மக்கள், நீரிழிவு நோயால் உலகில் உயிரிழந்துள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் குடும்ப நல பொது வைத்தியருமான டொக்டர் கே. அருளானந்தம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (19) நடைபெற்ற ‘நீரிழிவு நோயை ஒழிப்போம்; நலமுடன் வாழ்வோம்’ எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற நடைபவனியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், உலகில் 537 மில்லியன் பேர் நீரிழிவு நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளார்கள். 2030 ஆண்டில் 643 மில்லியன் மக்கள், இந்த நோய்க்கு ஆளாகுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 1980ஆம் ஆண்டு 108 மில்லியனாக இந்த நோயாளர்கள் காணப்பட்டனர். நீரிழிவு நோய் கூடிக் கொண்டு செல்கின்ற ஒரு நோயாகும். இந்த நோயை கட்டுப்படுத்துகின்ற போது, நிச்சயம் இதைக் குறைக்க முடியும்.

இந்த நோயின் தாக்கம் மிகவும் பாரதூரமானது. பாரிசவாதம், மாரடைப்பு, சிறு நீரகம் இழப்பு, கண் பார்வை இழப்பு, கால் இழப்பு போன்ற தாக்கங்களை ஏற்படுத்தும் என மேலும் தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் இருந்து மட்டக்களப்பு வரை எச்சரிக்கை!

# கடலுக்குச் செல்ல வேண்டாம்

■ கனகராசா சரவணன்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக, 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதால், காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுவோர், உடனடியாக கரைக்கு திரும்புமாறு நேற்று (20) வளிமண்டல திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வளிமண்டல திணைக்கள பொறுப்பதிகாரி சுப்பிரமணியம் ரமேஷ் தெரிவித்தார்.

தென்மேற்கு வங்கக்கடலில் வலுவடைந்து வரும் காற்றழுக்க தாழ்வு மண்டலம் வலுப்பெற்று தமிழகம், புதுச்சேரி, தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் உள்ளது. இதனால், காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடல் பரப்புகளில் காற்றின் வேகம் 50 தொடக்கம் 55 கிலோ மீற்றர் வரை இருப்பதுடன், அலையும் இரண்டு தொடக்கம் மூன்று மீற்றர் வரையில் காணப்படும்.

எனவே, மீனவர்களும் கடலில் பயணம் செய்வோரும் கடலில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# சிறுகதை ஆக்கப்போட்டியில் தங்கம் வென்றார்

■ நூருல் ஹுதா உமர்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலாசார இலக்கியப் போட்டிகளில் தேசிய ரீதியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வு வியாழக்கிழமை (17) பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில், பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், பல்கலைக்கழக மற்றும் திறந்த பிரிவில் சிறுகதை ஆக்கப்போட்டியில், இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழக மாணவன் எச்.கே முஹம்மட் ஜெம்ஷித் ஹஸன், தேசிய ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப்பெற்றார்.



# 120 ஆடுகளை கொண்டு சென்ற ஐந்து பேர் கைது

■ எப். முபாரக்

திருகோணமலை, அக்போபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 120 ஆடுகளைக் கொண்டு சென்ற ஐந்து பேர், நேற்று (20) அதிகாலை கைது செய்யப்பட்டாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருணாகல், கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த 20 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்ட ஐந்து சந்தேக நபர்களே 120 ஆடுகள் மற்றும் மூன்று லொறிகளுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள், கிண்ணியா, வான்எல, தோப்பூர், கந்தளாய் போன்ற பகுதிகளிலிருந்து 120 ஆடுகளுடன் மூன்று லொறிகளில் பயணித்தபோது, அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

# கோவில் கட்டுமானத்தின்போது பணியாளர் பலி

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

இயக்கச்சி முகாவில் பகுதியில் கோவில் கட்டுமானப் பணி செய்த பணியாளர் பலியாகிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோவில் கட்டடப் பணியின்போது, கொங்கிரீட் போடும் வேலை இடம்பெற்று கொண்டிருந்த போது, முட்டுக்கொடுக்கப்பட்டிருந்த மரங்கள் சரிந்து விழுந்தமையால், கொங்கிரீட் சரிந்து, கட்டடம் வீழ்ந்தமையால், பணியாளர் கட்டட இடிபாட்டுக்குள் சிக்கிய நிலையில், பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் இறந்தவர், தவபாலன் சதீசன் (வயது 27) சுழிபுரத்தை சேர்ந்தவர். மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பசுமாட்டைத் திருடி ஓட்டோவில் ஏற்றிச் சென்ற மூவர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

கன்று ஈன்ற பசுமாட்டை திருடி, சித்திரவதை செய்து ஓட்டோவில் ஏற்றிச் சென்ற மூன்று சந்தேக நபர்களை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கரம்பன் பகுதியில் இருந்து, யாழ்ப்பாணம் நோக்கி ஓட்டோவில் குறித்த பசுமாடு கடத்தப்பட்டுள்ளது. நாரந்தனை பகுதியில் குறித்த ஓட்டோவை மறித்து சோதனை செய்யப்பட்ட போது, பசு மாடு திருடப்பட்டு எடுத்துச் சென்றமை அறியப்பட்டது.



சந்தேக நபர்களில் இருவர் ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், மற்றையவர் ஆறுகால் மடம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# முதியோருக்கு உதவிப் பொருட்கள்

■ நிதர்சன் விணோத்

முதியோர் தினத்தை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தால் யாழ்ப்பாணம், இருபாலையில் உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 45 முதியவர்களுக்கு போர்வை, துவாய் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இருபாலை தெற்கு முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில், முதியவர்களுக்கு லயன்ஸ் கழக உறுப்பினர் ரி. தயாபரன் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தால் இவ் உதவிப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.



முதியோர் சம்பந்தமாக லயன் பி.ஆர் ரஞ்சனால் விழிப்புணர்வு கருத்தரங்கும் நடத்தப்பட்டது.

# “உதவிகளை சரியாகப் பயன்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டும்”

## கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் க.அ சிவனருள்ராஜா

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கொடையாளர்களால் வழங்கப்படுகின்ற உதவிகளை, சரியான முறையில் பயன்படுத்தி, கல்வியில் முன்னேறுவதுடன், சமூகத்தில் நல்ல மனிதர்களாக வளர வேண்டும் என கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் க.அ சிவனருள்ராஜா தெரிவித்துள்ளார்.

பரந்தன், குமரபுரம் கிராமத்தில் டொக்டர் சாம் கல்வி நிலையத்தின் ஆறாம் ஆண்டு நிறைவு விழாவும் திறன் வகுப்பறை திறப்பு விழாவும் மாணவர்களை கௌரவிக்கின்ற நிகழ்வும் நேற்று (20) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர், தொடர்ந்து உரையாற்றுகையில், டொக்டர் சாம் கல்வி நிலையத்தில் கடந்த ஆறு வருடங்களாக ஒரு நவீன கற்றல் முறையைக் கொண்டு, குறித்த பிரதேசத்தில் முன்பள்ளி இயங்கி வருவதுடன், தரம் 06 தொடக்கம் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு இலவச கல்வி, மதிய உணவு என்பவற்றையும் வழங்குகின்ற நிலையமாகத் திகழ்கின்றது.

மிகவும் பின் தங்கிய பிரதேசத்தில் இருக்கின்ற மக்களுக்கு சேவையாற்றுகின்ற எண்ணத்தோடு உருவாக்கப்பட்டு இருக்கின்ற இந்தக் கல்வி நிலையத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த காலத்தில், கொடையாளர்களால் வழங்கப்படுகின்ற உதவிகளைச் சரியாகப் பயன்படுத்தி, சமூகத்தில் நல்ல மனிதர்களாக வளர வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

# காணவில்லை

■ சண்முகம் தவசீலன்



புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தேராவில் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிங்காரவேலன் செல்வக்குமார் (வயது 48) சுகவீனம் காரணமாக, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விடுதி இலக்கம் 04 இல் 17 ஆவது கட்டிலில் இருந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் (19) காலை முதல் காணாமல் போயுள்ளார். இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள், கீழ் குறிப்பிடப்படும் அலைபேசி இலக்கத்துக்கு தகவல் தரவும். 0769107868, 0776916652

# பத்மநாபாவின் 71 ஆவது பிறந்ததின நினைவு



■ மன்னார் நிருபர்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) கட்சியின் ஸ்தாபக தலைவர் பத்மநாபாவின் 71 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் (19) மன்னாரில் நினைவு கூரப்பட்டது.

மன்னாரில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் சந்திரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆர் குமரேஸ், மத்திய குழு உறுப்பினர்கள், மாவட்ட குழு உறுப்பினர்கள், கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு, பத்மநாபாவின் உருவப் படத்துக்கு சுடர் ஏற்றி, மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



# விவசாயத்தை பின்தள்ளி கஞ்சாவுக்கு முன்னுரிமை

எஸ். கே. குமார்

வரவு- செலவுத் திட்டத்தில் (பட்ஜெட்) உள்ளூர் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்காமல், இலங்கையில் கஞ்சா பயிரிடுவது குறித்து ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார் எனத் தெரிவித்துள்ள, அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் தலைவரும் நுவரெலியா திறந்த பொருளாதார மத்திய நிலையத்தின் சங்கத்தின் பொதுச் செயலாளருமான அருண சாந்த ஹெட்டியாராச்சி, இலங்கையில் விவசாயத்தை விட கஞ்சா செய்கைக்கு ஜனாதிபதி முக்கியதுவம் வழங்கியுள்ளார் என குற்றஞ்சாட்டினார்.

நுவரெலியா திறந்த பொருளாதார மத்திய நிலைய காரியாலயத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அருணசாந்த ஹெட்டியாராச்சி மேலும் கருத்து தெரிவிக்கையில், கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில், விவசாயிகள் வீதியில் இறங்கி போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அத்தோடு விவசாயிகள் அநாதைகளாக்கப்பட்டனர். அதன் பின்னர் விவசாயிகள் கொஞ்சம் தலை நிமிர்ந்த போது, புதிய ஜனாதிபதி தனது அரசியல் அனுபவத்தை பயன்படுத்தி நல்ல வரவு-செலவு திட்டத்தை முன்வைப்பார் என நாம் நினைத்தோம். ஆனால், அது நடக்கவில்லை.

சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அமைச்சின் செயலாளர் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி விவசாய நிவாரணம் கேட்டோம். இந்தப் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும் என்றும் உரம் மற்றும் விதைகளின் விலை குறையுமெனவும் எதிர்பார்த்தோம். ஆனால் நாங்கள் எதிர் பார்த்தது ஒன்றுமே நடக்கவில்லை.

வரவு- செலவுத் திட்டத்தில் கஞ்சா பயிரிடுவது உகந்தது எனக் கூறப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு கஞ்சா நன்மை பயக்கும்; அதன் பிறகு விவசாயத்தை விட்டுவிட்டு காய்கறிகளுக்கு பதிலாக கஞ்சா பயிரிட வேண்டும். கஞ்சா பாற்குழம்பு செய்து சாப்பிட வேண்டும் என்பதை கண்டறிய குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.



72 வருடகால ஆட்சியில் இருந்த

# சகலரும் பொறுப்பு

ராஜபக்ஷ

இந்தளவுக்கு பொருளாதார ரீதியில் நாடு வீழ்ச்சியடைந்தமைக்கு நாட்டை கடந்த 72 வருடங்களாக ஆட்சி செய்த சகலரும் பொறுப்பு கூறவேண்டுமெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, பழியை ஒருசிலர் மீது மட்டுமே போடமுடியாது என்றார்.

இயற்கை அனர்த்தங்களால், நாவலப்பிட்டி பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்களை, சனிக்கிழமை (19) சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர், கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் இந்தளவுக்கு சீரழிந்தமைக்கு, பிரதானமாக ஜே.வி.பி பொறுப்பு கூறவேண்டும். ஜே.வி.பி காலத்திலேயே நிலைமை மோசமாகியிருந்தது. அந்தக் கட்சியால் (ஜே.வி.பி) ஒருபோதும் ஆட்சிப்பீடம் ஏற முடியாது.

நாவலப்பிட்டியில் கடந்த சில வாரங்களாக பெய்த அடைமழையால், ஒன்பது பாலங்கள் சேதமடைந்துள்ளன. அவற்றை புனரமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 23 பில்லியன் ரூபாய் மதிப்பிட்டுள்ளார். அதில், 150 மில்லியன் ரூபாயை ஒதுக்கி, பாலங்களை புனரமைக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# சுற்றுலா ஹோட்டல்களில் மதுபானம் விற்க அனுமதி

ரஞ்சித் ராஜபக்ஷ

நல்லதண்ணி நகரத்திலுள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றலா ஹோட்டல்கள் ஐந்துக்கு மதுபானம் (பியர், வைன்) விற்பனை செய்வதற்கு கலால் திணைக்களம் அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது.

சுற்றுலா வருவோருக்கு, தங்களுடைய சுற்றுலா ஹோட்டல்களில் மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்குமாறு அந்த ஐந்து ஹோட்டல்களின் உரிமையாளர்களும் சுற்றுலா சபைக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பல வருடங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இந்த அனுமதிப்பத்திரம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என ஹோட்டல்களின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறான ஹோட்டல்களில், உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமன்றி, சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகர்கள் மற்றும் அண்மித்திருக்கும் தோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றது என்று நல்லதண்ணி பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், சிவனொளிபாத மலைக்கு வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள், மதுபானம் எடுத்துவருவதை தடுக்கும் வகையிலும் அவ்வாறு எடுத்து வருபவர்களை கைது செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆணுறைக்குள் வைத்து ஐஸ் விற்றவர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ



நுவரெலியா, தலவாக்கலை ஆகிய பிரதேசங்களில் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களை விற்ற பிரதான வர்த்தகர், சனிக்கிழமை (19) பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலப்பட்டிய பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான சந்தேகநபர், பொதுப் போக்குவரத்து பஸ்களில் பயணித்து, போதைப்பொருட்களை விற்பனை செய்வதாகக் கிடைத்த இரகசிய தகவல்களுக்கு அமைய கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை சோதனைக்கு உட்படுத்தியதில், ஆணுறைகளுக்குள் போதைப்பொருட்களை மறைத்துவைத்து எடுத்துவந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறு எடுத்து வரும் போதைப்பொருட்களை நகரத்துக்கு அண்மையிலுள்ள குறுக்கு வீதிகளில் மறைத்துவைத்து, விற்பனை செய்கின்றார் என்பதும் தெரிந்துள்ளது.

சந்தேகநபரை கைது செய்யும் போது அவரிடம் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் 610 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக, தலவாக்கலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று அதிரடிப்படையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.





# விலை அதிகரிப்பால் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு

எஸ்.கே. குமார்

நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக நுவரெலியா திறந்த பொருளாதார மத்திய நிலைய மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இரசாயன உரம், கிருமிநாசினி விலை உயர்வாலும் தொடர்ந்து மூன்று, நான்கு மாதங்களாக பெய்த மழையாலும் உருளைக்கிழங்கு மற்றும் மரக்கறி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் தற்பொழுது மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்களும் விவசாயிகளும் தெரிவிக்கின்றனர்.

மரக்கறி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மரக்கறிகளின் விலைகளும் உயர்ந்துள்ளன. அதிக விலை கொடுத்து மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கும் கூட, மரக்கறிகளைத் தேடி அலைய வேண்டியிருப்பதாகவும் அவ்வாறு அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படும் மரக்கறிகளை வெளிமாவட்ட வர்த்தகர்களுக்கு விற்பனை செய்வதற்கும் முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.



# முட்டைக்கு கடும் தட்டுப்பாடு

சுதத் எச்.எம்.ஹேவா

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிர்ணய விலையில் முட்டைகளை விற்பனைச் செய்ய முடியாமையால், ஹட்டன் நகரிலுள்ள முட்டை வியாபாரிகள் பலர், முட்டைகளை விற்பனை செய்வதை நிறுத்திவிட்டனர். இதனால் நகரில் முட்டைக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சில கடைகளில் முட்டை ஒன்று 55 ரூபாய் முதல் 57 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. எனினும், சில முட்டைக்கடைகளில் முட்டை ஒன்று 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனினும், அவ்வாறான கடைகளில் முட்டை விற்பனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

எனினும், முட்டையின் மொத்த விலை 52 ரூபாய் முதல் 54 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது. இந்த நிலைமையால் முட்டைகளை விற்பனை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என முட்டை வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தெரிவித்தனர்.

முட்டை வர்த்தகத்தை மட்டுமே செய்யாமல், இதர சில்லறை பொருட்களையும் விற்பனை செய்யும் வர்த்தகர்கள், ஏனைய பொருட்களை விற்க வேண்டும் என்பதற்காக, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் முட்டையை விற்பனை செய்கின்றனர் என்றும் முட்டை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.



# மலையக மக்களின் தேசிய ஆவணம் மீள்பரிசீலணை

ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட மலையக மக்களின் தேசிய ஆவணத்தை மீள்பரிசீலணை செய்வதற்கான கலந்துரையாடல், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் வெள்ளவத்தையிலுள்ள, குளோபல் டவர் ஹோட்டலில் நடத்தப்பட்டது.

கீழ்காணும் மலையக மக்களின் அபிலாஷை கோரிக்கைகளுடன் நிகழ்கால அரசியல், பொருளாதார, சமூகவிடயங்கள் மற்றும் பெண்களின் விசேட கோரிக்கைகள் என்பன இக்கலந்துரையாடலின் போது ஆழமாக ஆராயப்பட்டன என கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தைச் சேர்ந்த யோகேஷ்வரி கிருஷ்ணன் தெரிவித்தார்.

இதற்கமைய,

1. 13 ஆம் திருத்தத்தின் முழுமையான அமலாக்கத்துடன் மாகாண சபை தேர்தல்களை தாமதமின்றி நடத்தல்.

2. தமிழுக்கு சம அந்தஸ்து மற்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் அடங்கிய மும்மொழி கொள்கையை அமல்படுத்தல்.

3. தேசிய நீரோட்டத்தில் அமைப்பு ரீதியான ஒருங்கிணைவுடன், இலங்கை சமூக பரப்பில், தனித்துவ அடையாளம் கொண்ட அங்கமாக, மலையக சமுதாயம், முழு சமத்துவமான குடியுரிமையை பெற்று வாழ்தல்.

4. நிலைவரம்பற்ற சமூக சபையை நுவரெலியா மாவட்டத்தில் செறிவாகவும், ஏனைய பகுதிகளில் சிதறியும் வாழும் இச்சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் பணியாற்ற அரசியலமைப்பு ரீதியாக உருவாக்குதல்.

5. மத்திய, மாகாண, உள்ளூராட்சி மட்டங்களில் அதிகார பகிர்வு மற்றும் பரவலாக்கல் ஏற்பாடுகள்.

6. அனைவரையும் உள்வாங்கும் சமச்சீர் பிரதிநிதித்துவ நோக்கில் நியாயமான தேர்தல் மற்றும் நிர்வாக எல்லை மீள்நிர்ணயத்துடன் கூடிய அனைத்து மட்டங்களிலும் அர்த்தமுள்ள விகிதாசார தேர்தல் முறைமை

7. நிலம், வீடு, தொழில், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் இதுவரை காலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிபிடிக்கும் நோக்கில் அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகள்.

8. தோட்ட குடியிருப்பு பிரதேசங்களை அரச பொது நிர்வாக கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்து, கிராமசேவகர், பிரதேச செயலக வலயங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, தோட்ட நிறுவனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டங்களில் பரவலாக்கப்பட்ட அரச நிறுவனங்களின், நிர்வாக மற்றும் நலவுரிமை சேவைகளைப் பெறுகின்ற முழுமையான குடிமக்களாதல் என்பன தொடர்பான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.


# மின்சாரம் தாக்கி தொழிலாளி மரணம்

எம். செல்ராஜா

ஹப்புத்தளை, கஹா கொல்லை பெருந்தோட்டத்தை சேர்ந்த நபர், மின்சார கம்பமொன்றில் சனிக்கிழமை (19) ஏறியபோது, மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

பசுவுக்கு புல் அறுக்க அவ்வழியாக வந்த மற்றுமொரு தொழிலாளி, சடலமொன்று கிடப்பதை அவதானித்து தோட்ட மக்களுக்கு தகவல் கொடுத்துள்ளார். அதன்பின்னர், ஹப்புத்தளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், சடலத்தை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கெசல்கமுவையில் அகழ்ந்த ஐவர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

காசல்ரீ நீர்த்தேகத்துக்கு நீர்வழங்கும் பிரதான ஆறுகளில் ஒன்றான கெசல்கமுவ ஓயாவில், சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், பொகவந்தலாவை பொலிஸாரால் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை (19) கைது செய்யப்பட்ட ஐவரையும் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றனர். மோரா தோட்டத்தில் வைத்தே இவர்கள் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்துள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் பொகவந்தலாவை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும் கிடைத்த தகவல்களுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மக்களின் கைகளிலேயே சிக்கியிருக்கும் மற்றுமொரு 'ராஜபக்ஷ'

கடந்த அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் கடுமையானதன் பின்னர், மே. 9 ஆம் திகதியன்று தனது பதவியை இராஜினாமா செய்த மஹிந்த ராஜபக்ஷ, களுத்துறையில், "மீண்டும் எழுவோம்" எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டமொன்றில் முதன்முறையாக தோன்றினார்.

அந்த தொனிப்பொருளில் நாவலப்பிட்டியவில் நடத்தப்பட்ட கூட்டம், சலசலப்புடன் முடிந்தது. இந்நிலையில், "மீண்டும் எழுவோம்" கூட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளான நவம்பர் 19ஆம் திகதியன்று, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முதன்முறையாக ராஜபக்ஷர்களுடன் இருந்தார்.

நாட்டின் பொருளாதாரம் சின்னாப்பின்னமாக்கப்பட்டு, மக்கள் வாடி வதைங்கிக்கொண்டிருப்பதற்கு முழுமையாக பொறுப்புகூறவேண்டிய முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமெரிக்காவில் இருந்து நேற்று (20) நாடு திரும்பியுள்ளார். அவரை புடைசூழ பலரும் வரவேற்றனர். சிலர் குனிந்து வணங்கவும் தவறவில்லை.

இறுதியான இடம்பெற்ற ஜனாதிபதித் தெரிவில் சுமார் 83.7 சதவீதமானவர்கள் வாக்களித்திருந்ததுடன், அதில் 52.25 சதவீதமானவர்களின் வாக்குகளை அதாவது 6.9 மில்லியனுக்கு அதிகமான வாக்குகளை கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுக் கொண்டார்.

பாரிய மக்கள் ஆணையைப் பெற்று வெற்றியீட்டிய போதிலும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இரண்டரை வருடங்கள் வரையான காலப்பகுதிக்கே ஜனாதிபதி பதவியில் தொடர முடிந்தது. இந்தக் காலப்பகுதியே, நாட்டு மக்களை தற்போதைய நிலைக்கு தள்ளிவிட்ட வரலாற்றில் மிகவும் மோசமான காலம்.

நாடு திவாலாகிய நிலைக்கு தள்ளப்பட்டமைக்கும் ராஜபக்ஷ முழுப் பொறுப்பேற்க வேண்டும். இவரின் மோசமாக பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக, 2022 ஏப்ரலில் மாதத்தில் இலங்கை முதன் முறையாக வெளிநாட்டு கடனை மீளச் செலுத்த தவறியதுடன், சர்வதேச சந்தைகளில் இலங்கை நாணயத்தின் மதிப்பும் இல்லாமல் செய்யப்பட்டது.

உரப் பாவனை தொடர்பான மோசமான தீர்மானத்தினால், விவசாயத் துறை பாதிக்கப்பட்டு, உணவுப் பாதுகாப்பும் அச்சுறுத்தல் நிலையை எய்தியது. மோசடிகளும், நிதிக் குற்றங்களும் தலைவிரித்தாடின.

இன்றும் கோட்டாபய ராஜபக்ஷ சமூகத்தில் சுதந்திரமாக நடமாடுவதையும், அரச செலவில் தமது வாழ்க்கையை அனுபவிப்பதையும் காண முடிகின்றது.

தற்போதைய அரசியல் தலைமைகளால் அவருக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷர்களுக்கு எதிராக இலங்கையின் சட்டம் எவ்வாறான நடவடிக்கையும் எடுக்காது என்றே புலனாகின்றது.

இந்நிலையில், இன்னுமொரு ராஜபக்ஷ நாட்டின் உயர்ந்த பதவிக்கு மீண்டும் தெரிவாவுவதும், தெரிவாகாமல் விடுவதும் மக்களின் கைகளிலேயே உள்ளது. அடுத்தடுத்த தேர்தல்கள் தற்போது நடைபெறுமா? என்ற ஐயம் இன்னுமே களையப்படவில்லை.

எனினும், அடுத்த தேர்தலின் போது மக்கள் அளிக்கும் வாக்குகளே நாட்டை கட்டியெழுப்புவதற்கு பிரதான காரணியாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். கடந்தகால தவற்றை மீண்டும், மீண்டும் மக்கள் விடுவார்களாயின் அதன், துன்பங்களை அனுபவித்த ஆகவேண்டும் என்பதை நினைவில் கொள்க.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

வண்டியை நிறுத்தத் தெரியாதவர்கள் அதை ஓட்டுவதற்கு முற்படக்கூடாது. இத்தகைய நபர்களுக்குக் கூட, வாகன அனுமதிப்பத்திரம் கிடைத்துவிடுகின்றது.

வாகனத்தை நிறுத்தத் தெரியாமல், வேகத்தைக் கூட்டும் கருவியை அழுத்துவதால், பல ஆபத்துகள் சம்பவித்த வண்ணம் இருக்கின்றன.

வாகனங்களை ஓட்டும் போது, தங்களை விட்டால் எவரும் இல்லை என்ற எண்ணத்தில், கர்வமாக ஓட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். நடைபாதை வாகனங்களை ஓட்டுவதற்காக இல்லை. காயப்படுபவர்கள், விபத்தில் இறப்பவர்கள் பற்றி யோசிப்பதில்லை. ஒருவரின் உயிர் பிரிந்தால், அவரின் குடும்பத்தின் நிலைமை என்னாவது?

நடந்து சென்று வீதியைக் கடப்பதற்கு மஞ்சள் கோட்டில் நின்றாலும் வாகனங்களை நிறுத்தாத ஆணவக்காரர்களை கைதுசெய்வதும் இல்லை. சுயநலமே உலகமா?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ் அரசியலுக்கு ஒரு பெரும் குழப்பம் தேவை



என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

ஆம்! தலைப்பு சரியாகத்தான் எழுதப்பட்டுள்ளது. இலங்கை தமிழ் அரசியல் பரப்பின் இன்றைய அத்தியாவசியத் தேவை, ஒரு பெரும் குழப்பம்!

கட்சி மோதல், உட்கட்சிப் பிரிவினை, குழாயடி சண்டைகள் என ஏற்கெனவே நாறிப்போய்க்கிடக்கும் இலங்கை தமிழ் அரசியல் பரப்பில், இன்னும் தேவைப்படுவது ஒரு பெருங்குழப்பம்தானா என நீங்கள் யோசிக்கலாம். நியாயமான யோசனை! அதற்கான விடையைத் தேடும் முன்பு, இலங்கை தமிழ் அரசியல் பரப்பின் இன்றைய நிலை, எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது.

இன்றைய இலங்கை தமிழ் அரசியல் பரப்பு, திக்குத் தெரியாத காட்டில், ஒன்றுக்கொன்று முரணான வழிகாட்டிகளின் சண்டைக்கு நடுவே சிக்கி, எங்கே போவதென்று தெரியாது, ஓரிடத்தில் தங்கிப் போய் நிற்கிறது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து, தமிழ் அரசியல், தாம் தலைமைத்துவம் வழங்குவதாகச் சொல்லிக்கொள்ளும் மக்களுக்காக, 13 வருடங்களில் என்னத்தைச் சாதித்தது என்று கேட்டால், அதற்கான தேறிய பதில் எதுவுமில்லை என்றுதான் வரும்.

ஒருவகையில் பார்த்தால், இந்தத் தமிழ் அரசியல்வாதிகள், தமது தேர்தல் வாக்குறுதிகளின்படி, தமிழ் மக்களுக்கு செய்வோம் என்று சொன்னவற்றைவிட, ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை கடந்த 13 வருடங்களில் செய்திருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல. 19ஆம் திருத்தமாகட்டும், 2015 நல்லாட்சியாகட்டும், 2018 டிசெம்பர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசியலமைப்பு விரோத ஆட்சியை விரட்டியடித்ததாக இருக்கட்டும், இது எல்லாமே இரா. சம்பந்தன் - சுமந்திரன் ஆகியோரது கைங்கரியங்கள்தான் என்றால் அது மிகையல்ல.

ஆனால், இதே 13 வருடங்களில் வடக்கு-கிழக்கு பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. இலங்கை அரசியலின் தலையெழுத்தை தீர்மானிக்கவல்ல தமிழ் அரசியல்வாதிகளால், வடக்கு-கிழக்கின் தலையெழுத்தைத்தான் மாற்றியமைக்க, வடக்கு-கிழக்கின் பிரதிநிதிகளால் முடியவில்லை!

கல்வி, பொருளாதாரம், உற்பத்தி, வாழ்க்கைத்தரம் என எல்லாவற்றிலும் வடக்கும் கிழக்கும் பின்தங்கியே இருக்கின்றன. ஆனால், சமகால வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் பரப்பில், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் முன்னரங்கில் நின்றாலும், தேசக்கட்டுமானம் பற்றிய அக்கறை அவற்றிடம் தென்படவில்லை. மாறாக நாக்கிலும், அறிக்கைகளிலும் மட்டும் தமிழ்த் தேசியம் வாழ்கிறது. மற்றப்படி, தமிழ்த் தேசியம் என்பது, இன்று குழாயடிச் சண்டைக்கான பொருளாக மாறியுள்ளது.

தேசக்கட்டுமானம் பற்றி அக்கறைகொள்வதற்குப் பதிலாக, தமிழ்த் தேசியத்துக்கு யார் சொந்தம் கொண்டாடுவதென்று அடிபட்டுக்கொண்டு கிடக்கிறது தமிழ் அரசியல் பரப்பு!

தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசிய விரோதமென முன்பு பரந்தளவில் இருநிலைப்பட்டிருந்த தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு, இன்று தமிழ்த் தேசிய பரப்புக்கு உள்ளேயே நீயா, நானா சண்டைகளால் உடைந்து போயிருக்கிறது. இதில் கட்சி, கூட்டணிகளுக்கு இடையேயான முரண்பாடுகளைத் தாண்டி, கட்சிக்குள்ளான, கூட்டணிகளுக்குள்ளான முரண்பாடுகளும், அடிபாடுகளுமே தமிழ்த் தேசிய அரசியலை தினந்தோறும் இன்று நகர்த்திக்கொண்டிருக்கும் முக்கிய விசையாக இருக்கிறது.

தமிழ்த் தேசிய நலனுக்கும், கட்சிக்காரர், தனிப்பட்ட ஆளுமைகள், அந்த ஆளுமைகளைச் சுற்றிய அரசியல் வட்டங்கள் ஆகியவற்றின் நலனுக்கும் இடையிலான போட்டியில், தமிழ் தேசியமும், அதன் நலன்களும் மறக்கப்பட்டுவிட்டன. இதனால்தான் தமிழ்த் தேசிய அரசியலால், 2009இற்கு பின்னர், இந்த 13 வருடங்களில் எதையும் தமிழ் மக்களுக்காக சாதிக்க முடியவில்லை.

தமிழ் மக்களுக்காக ஒரு குழந்தையைப் பிரசவிப்பதைவிட, அந்தக் குழந்தைக்கு தம் பெயரே முதலெழுத்துகளாக அமைய வேண்டும் என்ற எண்ணம்தான் தமிழ் அரசியல்வாதிகளிடையே மேவி நிற்கிறது. அதனால்தான், தன் பெயர் முதலெழுத்தாக வராவிட்டால், குழந்தையே வேண்டாம் என்ற குருட்டுத் தன்னலம் இந்தத் தமிழ் அரசியல்வாதிகளிடையே மேலோங்கி நிற்கிறது.

ஒரே கொள்கை கொண்டோர் என்று சொல்லிக்கொள்வோர் கூட, அந்தக் கொள்கைக்காக ஒரே மேடையில் ஒன்றாக நிற்கத்தயாராக இல்லாமைக்கு இதுதான் காரணம். தனிமனிதனை மையப்படுத்தி, தனது அரசியலை கட்டமைத்த எந்த நாடும் தேசமும் சமூகமும், நீண்டுநிலைக்கத்தக்க அரசியல் வெற்றிகளை நீண்டகாலத்திலும் பெற்றுக்கொண்டதில்லை. நிற்க!

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு, தேசக்கட்டுமானத்தை மறந்ததால், தமிழ்த் தேசம் சமூக, பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. மக்கள் தப்பிப்பிழைத்தலுக்கான வழியைத் தேட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்த் தேசிய அரசியல், மக்களுக்கான எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை வழங்காததன் விளைவுதான், தமிழ்த் தேசத்தின் இளம் வாக்காளர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர், தமிழ்த் தேசியம் அல்லாத மாற்றுக் கட்சிகளின் அரசியல்வாதிகளை நோக்கி, தமது நம்பிக்கைப் பார்வையைத் திருப்புகின்றனர்.

இதுதான் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நடந்தது. இது நடந்த பின்னர் கூட, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு சுதாகரிக்கவில்லை. இன்னும் அதே தனிநபர் மைய அரசியல், உட்கட்சி, உட்கூட்டணிப் பிளவுகள், குழாயடிச் சண்டைகள் என பழங்கதை, தொடர்கதையாகவே இருக்கிறது.

அதெல்லாம் சரி! அது என்ன தமிழ் அரசியல் பரப்பில் பெருங்குழப்பம் தேவை?

'தக்கன பிழைக்கும்' என்பது இயற்கையின் விதியென்றால், அது அரசியலுக்கும் பொருந்தும். காலத்துக்கு ஏற்ப தன்னைப் பரிபாலித்துக்கொள்ளும் அரசியல்தான் பிழைக்கும்; மற்றையவை மடியும்.

இன்று தமிழ் அரசியல் பரப்பில், ஒரு பெரும் மாற்றம் தேவைப்படுகிறது. அந்த மாற்றத்துக்கான ஆரம்பப்புள்ளி ஒரு பெருங்குழப்பம்தான்.

ஒவ்வொரு மனித சூழ்நிலையும், ஒழுங்குக்கும் குழப்பத்துக்கும் இடையிலான போராட்டம்தான். மக்களிடையேயான உறவுகளில், நிறுவன சூழ்நிலைகளில், சமூகத்தில், ஒழுங்கு மற்றும் குழப்பம் ஆகியவற்றுக்கு இடையேயான இயக்கம், அமைதியான காலங்கள் மற்றும் நெருக்கடி காலங்களால் வெளிப்படுத்தப்படுகிறது.

அமைதியான காலங்களில், எல்லாம் பெரும்பாலும் சரியாக நடப்பதாக அமையும்; விடயங்கள் போதுமான வரிசையில் இருக்கும். இதை ஒழுங்கு எனலாம். அதேசமயம் நெருக்கடியான காலகட்டங்களில், ஒழுங்கை மறுசீரமைக்க வேண்டிய இடத்தில், குழப்பமான சூழ்நிலை உருவாகிறது.

நெருக்கடியும் குழப்பமும் எப்போதும் ஒரு மூலையிலோ, அல்லது மேற்பரப்பின் கீழ் எங்காவதோ இருந்துகொண்டேயிருக்கும். தனிநபர்களும் சமூகமும் முடிந்தவரை நெருக்கடியையும் குழப்பத்தையும் தவிர்க்க முயற்சி செய்கின்றன. ஆனால், நெருக்கடியும், குழப்பமும்தான், ஒழுங்கின் பிறப்பிடம். குழப்பம் இல்லாமல் ஒழுங்கு இருக்க முடியாது; அது குழப்பத்தில் இருந்து பிறக்கிறது. குழப்பம்தான் தாய்; ஒழுங்கு அதற்குள் இருந்து பிறக்கிறது. இரண்டும் எல்லாவற்றிலும் எல்லா சூழ்நிலைகளிலும் உள்ளன.

இன்று தமிழ் அரசியல் பரப்பு குழறுபடியான சூழலில் இருக்கிறது. அதற்கு ஒரு புதிய ஒழுங்கு தேவை என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஆனால், அந்தப் புதிய ஒழுங்கு, எவ்வாறு உருவாக்கப்படும் என்பது குறித்துத்தான் நாம் எதிர்உள்ளுணர்வோடு சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது.

ஒழுங்கிலிருந்து, புதியதோர் ஒழுங்கு பிறக்காது. புதியதோர் ஒழுங்கு பிறக்க, குழப்பம் தேவை. ஒரு பெருங்குழப்பத்தில் இருந்துதான், புதியதோர் ஒழுங்கு பிறக்கும். இந்த எதிர்உள்ளுணர்வுச் சிந்தனையூடாக, இன்றைய தமிழ் அரசியல் பரப்பில், புதிய ஒழுங்குக்கான தேவையை நாம் அணுகினால், அதை அடையப்பெறப்படுவதற்கு, ஒரு பெரும் குழப்பம் தேவை என்பது தெளிவாகும்.

இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஹோசே சறமாகோ, "குழப்பம் என்பது புரிந்து கொள்ளக் காத்திருக்கும் ஒழுங்கு மட்டுமே" என்பார்.

இலங்கை தமிழ் அரசியல் பரப்பு, திக்கற்ற நிலையில் சிக்கிப் போய், குழம்பிக்கிடக்கிறது. இங்கு ஒரு புதிய ஒழுங்குக்கான தேவை இருக்கிறது. அதற்கான குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. ஆனால், மாற்றம் சுமூகமாக நடக்க வேண்டும். குழப்பம், ஒழுங்கைப் பாதித்துவிடும் என்று அதே குரல்கள் எச்சரிக்கின்றன. அந்த எச்சரிக்கையில் அர்த்தமில்லை.

இங்கு புதிய ஒழுங்கு தேவையென்றால், அது பெரும் குழப்பத்திலிருந்தே தொடங்கும் என்ற எதிர் உள்ளுணர்வுச் சிந்தனையோடு இந்த விடயத்தை அணுகுவதே, தமிழ் அரசியல் பரப்பில், புதிய ஒழுங்கை வரவேற்பதற்கான ஒரே வழி.

## கடிதங்கள்

### பொலிவேரியனில் ஆபத்தை சந்திக்கும் மக்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததன் பின்னர், கடந்த மஹிந்த அரசாங்கத்தால் நிர்மாணித்து கொடுக்கப்பட்ட சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராம மக்கள், நான்கு ஜனாதிபதிகள், மூன்று பாராளுமன்ற தேர்தல்கள் என்பவற்றைச் சந்தித்து விட்டபோதிலும், இதுவரை தம்முடைய குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படவில்லை என ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

பொலிவேரியன் கிராமத்தில் உள்ள வீதிகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதையும், தரமற்ற அபிவிருத்திகள் மூலம் பாதைகள் உடைந்து காணப்படுவதையும் பலதடவைகள் அதிகாரிகள், அரசியல் வாதிகளுக்கு எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் குளம் போன்று நீர் தேங்கி நிற்பதால் பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் அடிக்கல் நடப்பட்டு பல வருடங்கள் கடந்தும் வீதி அபிவிருத்திக்கு நடப்பட்ட எந்த அடிக்கற்களும் இன்னும் செயலுருவம் பெறவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

வடிகான்கள் நீர் வடிந்தோட முடியாதளவு மண்ணால் அடைபட்டு இருப்பதுடன் கொள்கலன்கள் வடிகான்களில் வீசப்பட்டும் காணப்படுகின்றன. வடிகான்களுக்கு பொருத்தமான மூடிகள் இடப்படாமையால் சிறுவர்கள் அடிக்கடி விபத்துகளை சந்திப்பதுடன் பெரியோர்களும் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

உரிய அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வை வழங்க முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

நூருல் ஹுதா உமர்

Mandarina ஹோட்டலுக்கு

# முன்னணி வணிக ஹோட்டல் விருது



ஆறாவது தடவையாக நடைபெற்ற தெற்காசிய பிரயாண விருதுகள் 2022 (South Asian Travel Awrds 2022 - SATA) நிகழ்வில், ‘முன்னணி வணிக ஹோட்டல்’ விருதை கொழும்பு Mandarina ஹோட்டல் சுவீகரித்துள்ளதாக அறிவித்துள்ளது. கோலாகலமாக இடம்பெற்ற இவ்விருது வழங்கல் நிகழ்வு மாலைதீவில் உள்ள Adaaran Select Hudhuranfushi இல் விமரிசையாக நடைபெற்றது.

மெக்சன்ஸ் ஹோல்டிங்ஸ் விருந்தோம்பல் துறை பணிப்பாளரான சாரா மிஸ்வர், குழும நிதிக் கட்டுப்பாட்டாளரான ஷமீலா மிஸ்வர், மெக்சன்ஸ் புரொப்பட்டீஸ் இன் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரங்க குணவர்த்தன, கொழும்பு Mandarina ஹோட்டலின் பொது முகாமையாளரான தினேஷ் ஹெட்டியாராச்சி, கொழும்பு Mandarina ஹோட்டலின் தலைமை விற்பனை அதிகாரியான ரமேஷ் விதானாராச்சி ஆகியோர் கொழும்பு Mandarina ஹோட்டலின் சார்பில் இந்நிகழ்வில் கலந்துகொண்டு விருதை ஏற்றுக்கொண்டனர்.

தெற்காசிய பிரயாண விருதுகள் (SATA), தெற்காசியாவின் சிறந்த விருந்தோம்பல் மற்றும் பிரயாணத் துறையை அங்கிகரிக்கிறது. மதிப்புமிக்க வருடாந்த நிகழ்வு தலைசிறந்த நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை பல விருதுப் பிரிவுகளின் கீழ் கௌரவிக்கிறது. SATA ஆனது, விருந்தினர் தெரிவு (Visitors Choice) விருதுகள் மற்றும் சிறப்பு அங்கீகார (Special Recognition) விருதுகள் தவிர, போட்டியிடும் ஹோட்டல்கள் மற்றும் வர்த்தக நாமங்களுக்காக 52 க்கும் மேற்பட்ட பிரிவுகளுடன் கீழ் விருதுக்கான விண்ணப்பங்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

மொத்தம் ஆறு தெற்காசிய நாடுகள் SATA 2022 விருதுகள் நிகழ்வில் போட்டியிட்டன, 500 க்கும் மேற்பட்ட இடங்கள் இவ்விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டன. மாலைதீவு மற்றும் சார்க் பிராந்தியத்தில் உள்ள 15 க்கும் மேற்பட்ட அமைப்புகளால் இந்த விருதுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

“தெற்காசியப் பயண விருதுகள் 2022, பல ஆண்டுகளாக, தெற்காசியப் பிராந்தியத்தில் விருந்தோம்பல் துறையில் தலைசிறந்தவர்களை அங்கிகரித்து வருகிறது. இந்த நிகழ்வில் மீண்டும் மீண்டும், தொழில்துறை தலைவர்கள் பாராட்டுகளையும் அங்கிகாரத்தையும் பெற்றுள்ளனர். மேலும் இது போன்ற ஒரு மதிப்பிற்குரிய நிறுவனத்தால் அங்கிகரிக்கப்படுவது உண்மையில் பெரும் பாக்கியம் மற்றும் கௌரவமாகும்” என மெக்சன்ஸ் ஹோல்டிங்ஸ் இல் விருந்தோம்பல் துறைக்கான பணிப்பாளரான சாரா மிஸ்வர், கொழும்பு Mandarina ஹோட்டலின் இவ்வெற்றி குறித்து கருத்து தெரிவித்தார்.



# பைரஹாவில் பிசிஆர் சோதனை வசதி

பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சி நிறுவனம் தனது ஆய்வுகூடத்தில் நுண்ணுயிரியல் ஆய்வுகூடமொன்றையும் சேர்த்து தற்போது அதனை நவீனமயமாக்கியுள்ளது. இந்நிறுவனம் தனது தொழிற்சாலைகள், பண்ணைகள் மற்றும் குஞ்சு பொரிக்கும் மையங்கள் போன்ற பலவற்றில் சுத்தம் பேணும் தராதரங்களை மதிப்பீடு செய்து, உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன், சர்வதேச மற்றும் உள்ளூர் தராதரங்களை உறுதிப்படுத்தும் வகையில் பதப்படுத்திய கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சியை மூலமாகக் கொண்ட உற்பத்திகளை இங்கு சோதனை செய்து வருகிறது.

பைரஹாவின் எலிஸா ஆய்வுகூடம் 1995 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன், கோழி வளர்ப்பு மற்றும் வணிகரீதியான புரொயிலர் பறவைகளின் ஆரோக்கிய நிலைமையை கண்காணிக்கவும், மதிப்பிடவும் உதவுகிறது.

புதிதாக சேர்க்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் மூலம், நிறுவனத்தின் ஆய்வுகூடமானது எந்தவொரு கோழி வளர்ப்பு மற்றும் வணிகரீதியான புரொயிலர் குஞ்சுகள்/ பறவைகளின் பண்ணையிலும், கோழி தொடர்பான நோய்த்தொற்றுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கும், சரியான நேரத்தில் அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தேவையான கருவிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும். உணவுப் பொருட்களின் பகுப்பாய்வில் நோய்க்கிருமி நுண்ணுயிரிகளைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்படும் பிசிஆர் சோதனைகளைப் போலவே, எங்கள் தயாரிப்புக்களின் தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த மாதிரிகளை நாம் தொடர்ந்து சோதிக்க முடியும்.

பைரஹாவின் எலிஸா மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் ஆகியன பிற கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அவற்றின் சேவைகளை வழங்குவதைப் போலவே, இந்த வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் பறவைகள் கூட்டத்தின் ஆரோக்கிய நிலைமையை மேம்படுத்துவதற்கும், அதன் பிசிஆர் சோதனை வசதிகளை வழங்கும்.

புதிய ஆய்வுகூடத்தின் அங்குரார்ப்பண விழாவில், பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான யாக்கூத் நளீம் கூறுகையில், “கோழிப்பண்ணை தொழிலில் ஏறக்குறைய 47 வருட அர்ப்பணிப்புடனான சேவையுடன், பைரஹா ஃபாம்ஸ் நிறுவனம் பல உள்ளூர் மற்றும் சர்வதேச விருதுகளையும் பெற்றுள்ளது. அத்துடன், 2022 ஆம் ஆண்டில் சுமார் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாயை ஈட்டும். மத்திய கிழக்கு நாடுகளின் அரசாங்கங்களுடன் உடன்படிக்கைகளின் ஊடாக இது சாத்தியமாக இருக்கும்” என்றார்.

# கனவுகளுக்கு யூனியன் அஷ்யூரன்ஸ் வலுச் சேர்ப்பு

யூனியன் அஷ்யூரன்ஸ், மஹியங்கனை, ஹந்தகானாவ மகா வித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்திருந்தது. இந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளினூடாக, அவரின் மாணவர்களின் ரக்பி விளையாட்டுத் திறமைகளை வெளிக் கொண்டுவந்திருந்தமைக்காக இந்த உபகரணத் தொகுதி யூனியன் அஷ்யூரன்சினால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

பாடசாலையின் விளையாட்டு ஆசிரியராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாடசாலையில் குறிப்பிட்டளவு விளையாட்டுத் தெரிவுகள் மாத்திரம் மாணவர்களுக்கு காணப்பட்டதை ஆசிரியர் சாமிந்த கருணாரட்ன அவதானித்திருந்தார். மாற்றத்தை ஏற்படுத்தும் உத்வேகத்துடன், இந்த விளையாட்டுக்களில் ரக்பி விளையாட்டையும் அவர் இணைத்திருந்தார். இந்த விளையாட்டைப் பற்றி பல மாணவர்கள் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிருக்கவில்லை. பல தடைகளைக் கடந்து, தமது கடமைகளுக்கு அப்பால் சென்று, இந்த விளையாட்டை பாடசாலையில் அறிமுகம் செய்திருந்தார். குறிப்பாக, பாடசாலை அணிக்கு உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நிதி உதவியைக்கூட நாடியிருந்தார்.

இவரின் வழிகாட்டலின் கீழ், ஹந்தகானாவ மகா வித்தியாலயத்தின் இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஒரே வருடத்தினுள் இந்த விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டது மாத்திரமன்றி, மத்திய மாகாண காலிறுதிப் போட்டி (14 வயதுக்குட்பட்ட) வரை முன்னேறியிருந்தனர். அத்துடன், அபிவிருத்தி ரக்பி போல் காலிறுதிப் போட்டிகள் வரையிலும் முன்னேறியிருந்தனர்.

இந்த மாணவர்களின் தேவைகள் மற்றும் அவர்களின் பயிற்றுவிப்பாளர் காண்பித்திருந்த ஈடுபாட்டை இனங்கண்டிருந்த யூனியன் அஷ்யூரன்ஸ், ரக்பி அணிக்கு அவசியமான சீருடைகள் மற்றும் பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை வழங்கியிருந்தது.

கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில், “எமது மாணவர்கள் பல திறமைகளைக் கொண்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவற்றை வெளிக் கொண்டு வருவதற்கான ஒரு ஆதாரமாக நான் இருப்பதையே எதிர்பார்த்தேன்” என்றார்.

கொல்கத்தா

# சிறையில் அமைச்சருக்கு மசாஜ்



## வீடியோவால் பரபரப்பு

சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சத்யேந்தர் ஜெயினுக்கு உதவியாளர் ஒருவர் மசாஜ் செய்யும் வீடியோவொன்று இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் தனியார் நிறுவனமொன்றில் முறைகேடு நடந்ததாகப் புகார் எழுந்தது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டதில் ஆம் ஆத்மி அமைச்சராக இருக்கும் சத்யேந்தர் ஜெயினிடம் கடந்த 2018ஆம் ஆண்டு விசாரணை நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்நிறுவனத்துக்கு சொந்தமான 4.81 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத்துறையினர் முடக்கினர்.

பின்பு விசாரணை தீவிரபடுத்தப்பட்ட நிலையில், கடந்த மே மாதம் சத்யேந்தர் ஜெயின் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டார்.





இந்நிலையில், சிறையில் சத்யேந்தர் ஜெயினுக்கு உதவியாளர் ஒருவர் மசாஜ் செய்வது போன்ற சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

குறித்த வீடியோவில் படுக்கையில் படுத்து இருக்கும் சத்யேந்தர் ஜெயினுக்கு ஒருவர் நாற்காலியில் அமர்ந்து கை, கால்களை பிடித்து விடுவது போன்று உள்ளது.

இந்நிலையில் இவ் வீடியோ குறித்து சத்யேந்தர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அதில் சிறைச்சாலை விதிமுறைகளை பின்பற்றியே சத்யேந்தர் ஜெயின் சலுகைகளை பெற்றுள்ளதாகவும், அதில் எவ்வித விதிமீறல்களும் இல்லை எனவும், சந்யேந்தரின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம்

# மோசடிக் கும்பலிடம் சிக்கி மொடல் அழகியான இளைஞர்



மோசடிக் கும்பலொன்று, வேலை வாங்கித் தருவதாகக் கூறி இளைஞர் ஒருவரை கம்போடியாவுக்கு அழைத்துச் சென்று அவரை மொடல் அழகி போன்று நடிக்க வைத்து சபலப் புத்திக்காரர்களிடம் பணம் பறிக்க வைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ‘நீதிராஜன்‘. இவர் வெளிநாட்டில் பணிபுரிவதற்கு நீண்ட காலமாக முயற்சி செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த ‘மகாதீர் முகமது‘ என்பவர் இரண்டரை லட்சம்ரூபா வழங்கினால் கம்போடியாவில் ‘டேட்டா என்ட்ரி ஒப்பரேட்டர் ‘ வேலை வாங்கித் தருவதாக் கூறியுள்ளார்.

இதற்கு நீதி ராஜன் சம்மதம் தெரிவித்திருந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் சுற்றுலா விசாவில் நீதிராஜன் கம்போடியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு போன பின்னரே அவர் சீனாவைச் சேர்ந்த சைபர் மோசடி கும்பலொன்றுக்கு 3000 அமெரிக்க டொலருக்கு விற்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த கும்பலானது இன்ஸ்டாகிராம், முக நூல், டுவிட்டர் போன்ற சமூக வலைதளங்களில் மொடல் அழகிகளின் பெயரில் போலியான கணக்குகளைத் தொடங்கி ,தொழில் அதிபர்களுடன் மயக்கும் விதமாகப் பேசி, அவர்களை தங்கள் வலையில் வீழ்த்தி தாங்கள் பரிந்துரைக்கும் நிதி நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்ய வைத்து அவர்களிடம் இருந்து பணத்தை மோசடி செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளது.

இந்நிலையில் அக்கும்பலானது நீதிராஜனையும் மொடல் அழகி போன்று நடித்து சபலபுத்திக்காரர்களிடம் பணம் பறிக்கக் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

ஆரம்பத்தில் அவ்வாறு நடிக்க மறுத்த நீதி ராஜனை சிறை போன்ற அறையில் அடைத்து உணவு வழங்காமல், சித்ரவதை செய்து, குறித்த பணியில் ஈடுபட வைத்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த கும்பலுக்குத் தெரியாமல் இந்திய தூதரகத்தை அணுகிய நீதிராஜன் தனக்கு நடந்த கொடுமைகள் குறித்துத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து இந்திய தூதரகத்தின் உதவியுடன் ஒருவழியாக தமிழகம் திரும்பியுள்ள நீதிராஜன், தன்னைப் போல் 1500 தமிழக இளைஞர்கள் குறித்த மோசடி கும்பலிடம் சிக்கியுள்ளனர் எனவும், அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தன்னை ஏமாற்றி அழைத்துச்சென்று கம்போடியாவில் விற்ற மோசடி ஏஜெண்ட் மகாதீர் முகமது மற்றும் சையதுருஹானி ஆகியோர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளார்

சிங்கப்பூர்

# 4 கண்டங்களைக் கடந்து உணவு டெலிவரி செய்த யுவதி




சிங்கப்பூரிலிருந்து அண்டார்டிகாவுக்கு ச் சென்று யுவதியொருவர் உணவு டெலிவரி செய்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியரான மானசா கோபால் என்பவரே 4 கண்டங்களைக் கடந்து சுமார் 30,000 கிலோ மீற்றர் தூரம் பயணித்து வாடிக்கையாளருக்கு உணவு டெலிவரி செய்துள்ளார்.

இது உலகின் மிக நீளமான உணவு டெலிவரி எனக் கருதப்படுகி ன்றது.

மானசாவின் இப் பயணம் ஃபுட் பாண்டா என்ற நிறுவனம் மூலம் நிறை -வேறியுள்ளது. ஃபுட் பாண்டா என்பது ஸ்விக்கி, ஊபர், சோமேட்டோ போன்றதொரு நிறுவனம் ஆகும்.

மானசா இதற்கு முன்னர் பதிவிட்டிருந்த போஸ்ட் ஒன்றில் அண்டார்டிகாவுக்கு பயணம் மேற்கொள்ள நிதி திரட்டவேண்டும் எனவும், ஸ்பொன்சர் தேடி வருவதாகவும் தெரிவித்திருந்தார்.




மத்திய பிரதேசம்

# தீவிர சிகிச்சை பிரிவுக்குள் புகுந்த பசு



மத்தியப் பிரதேசம், ராஜ்கர் பகுதியில் உள்ள மருத்துவம னையொன்றில் பசுவொன்று சுதந்திரமாக சுற்றித் திரிந்தசம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக ICU எனப்படும் தீவிர சிகிச்சைப் பிரிவில் குறித்த பசு நடமாடிய காட்சி இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பசு விரட்டியடிக்கப்பட்ட போதும், கவனக்குறைவாக பசுவை உள்ளே வரவிட்ட ஊழியர்கள் மீது மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.



மகாராஷ்டிரா

# மெகா குடும்பம்

மகாராஷ்டிராவின் சோலாபூர் என்ற இடத்தில் 72 பேர் கொண்ட குடும்பமொன்று வாழ்ந்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

4 தலைமுறைகளாக கூட்டு குடும்பமாக வாழ்ந்து வரும் இவர்கள் வர்த்தக நிறுவனம் ஒன்றை குடும்பமாக இணைந்து நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுளள்து.

இது குறித்து குறித்த குடும்பத்தினர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் ”தாம் நாளொன்றுக்கு 20 லீற்றர் பால் மற்றும் 15 கிலோகிராம் காய்கறி வாங்குவதாகவும், அசைவ உணவு சாப்பிடவேண்டும் என்றால், இதற்கு செலவாகும் பணத்தை போன்று மூன்று முதல் நான்கு மடங்கு செலவாகும் எனவும்” எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் “நாங்கள் ஒரு வருடத்திற்கான பொருட்களை வாங்கி சேகரித்து விடுவோம். அரிசி, கோதுமை, பருப்பு போன்றவை 40 முதல் 50 மூட்டைகள் வாங்குகிறோம். அதிக அளவில் வாங்குவதால், மொத்த விலைக்கே வாங்கிவிடுகிறோம்.

இதே குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு ஏதும் வித்தியாசமாக தெரியாது. ஆனால் வெளியாட்கள் திருமணம் செய்துகொண்டு இங்கு வந்தால், பழகிக்கொள்ள சற்று கடினமாக தான் இருக்கும்” எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் ”இது நாள் வரை நாங்கள் யாரும் தனிமையை உணர்ந்ததில்லை எனவும் எங்களுக்குள் சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டாலும், அதை அனைவருடன் அமர்ந்து பேசி தீர்த்துக்கொள்வோம்” எனவும் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியா

# உக்ரேனுடன் கை கோர்க்கும் ரிஷி சுனக்



உக்ரேனுக்கு மேலும் 60 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்க உள்ளதாக பிரித்தானியாவின் பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

பிரதமராக பதவியேற்ற பின் முதல் முறையாக ரிஷி சுனக் உக்ரேன் சென்றுள்ளார்.

உக்ரேன் தலைநகர் கீவ்வில், அந்நாட்டின் ஜனாதிஜபதி ஜெலன்ஸ்கியை நேரில் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பின் போது உக்ரேனுக்கு மேலும் 60 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக ரிஷி சுனக் அறிவித்தார்.

இச் சந்திப்பு குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள ரிஷி சுனக், “விடுதலைக்காக போரிடுவது என்றால் என்ன என்று பிரித்தானியாவுக்கு நன்றாக தெரியும். உக்ரேன் மக்களின் துணிச்சல் இந்த உலகத்திற்கே பெரும் உத்வேகமாக அமைந்துள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்கா

## மீண்டும் டுவிட்டரில் இணைந்தார் 'ட்ரம்ப்'

அமெரிக்காவில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, வன்முறையைத் தூண்டும் விதத்தில் கருத்துகளை வெளியிட்ட காரணத்திற்காக, முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் (Donald Trump) கணக்கை, டுவிட்டர் நிறுவனம் நிரந்தரமாக முடக்கியிருந்தது.

தற்போது டுவிட்டரை எலோன் மஸ்க் கைப்பற்றியுள்ள நிலையில் ட்ரம்பிற்கு மீண்டும் அவரது டுவிட்டர் கணக்கை பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுமா? என்பது குறித்த விவாதங்கள் அதிகரித்தன.

இதனையடுத்து, டொனால்ட் ட்ரம்பை டுவிட்டரில் மீண்டும் சேர்க்கலாமா என்பது குறித்து எலோன் மஸ்க் டுவிட்டரில் வாக்கெடுப்பை நடத்தினார்.

இவ்வாக்கெடுப்பில் பெரும்பாலானவர்கள் (51.8 %) ட்ரம்பை சேர்க்கலாம் என்பதற்கே வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து, டொனால்ட் ட்ரம்பின் டுவிட்டர் கணக்கின் மீது போடப்பட்டிருந்த தடையை எலான் மஸ்க் நீக்கியுள்ளார்.

இதனால் 22 மாதங்களுக்கு பின்னர் ட்ரம்பின் கணக்கு டுவிட்டரில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரேஸிலில்

## 3000 க்கும் மேற்பட்ட உலகக்கோப்பைகள் தயாரிப்பு



காற்பந்து ரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் உலகக்கோப்பை காற்பந்துத் தொடரானது நேற்றைய தினம் கட்டாரில் ஆரம்பமானது.

இந்நிலையில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவை சேர்ந்த கைவினைக் கலைஞரான ஜர்பாஸ் மெனெகினி என்பவர் 3000 க்கும் மேற்பட்ட உலகக்கோப்பை ட்ராபிக்களை உருவாக்கியுள்ளார்.

காற்பந்து ரசிகரான அவர் சுற்றுலாப் பயணிகள் மற்றும் ரசிகர்களுக்கு குறித்த ட்ராபிக்களை விற்பனை செய்துவருவதோடு 17 நாடுகளுக்கு இதனை ஏற்றுமதியும் செய்து வருகின்றார்.

மேலும் இவ் உலகக்கோப்பை போட்டித் தொடரில் பிரேஸில் அணி வெற்றிபெற்று தங்கக்கோப்பையை வென்றுவர வேண்டும் எனத் தான் விரும்புவதாகவும் ஜர்பாஸ் தெரிவித்துள்ளார்.

மலேசியா

## பரபரப்பை ஏற்படுத்தியுள்ள மலேசியத் தேர்தல்



மலேசிய பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று முன்தினம்(19) விறுவிறுப்பாக நடைபெற்றது.

நாட்டை நீண்ட காலம் ஆண்டு வந்த ஐக்கிய மலேசிய தேசிய கட்சி (உம்னோ) கூட்டணி மீண்டும் ஆட்சியைப் பிடிக்குமா அல்லது எதிக்கட்சித் தலைவர் அன்வர் இப்ராகிம் தலைமையிலான அரசியல் சீர்திருத்த அணி ஆட்சியைக் கைப்பற்றுமா என்ற எதிர்ப்பாப்பு அந்நாட்டு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மலேசியாவில் ஐக்கிய மலேசிய தேசிய கட்சி கூட்டணி (உம்னோ) நீண்ட காலமாக ஆட்சியில் இருந்து வந்தது. கடந்த 2018ஆம் ஆண்டு தேர்தலில் அந்தக் கட்சி முதல்முறையாக தோல்வியடைந்தது.

அப்போது பிரதமராக இருந்த நஜீப் ரஸாக் மீதான ஊழல் குற்றச்சாட்டு காரணமாக ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து, முன்னாள் பிரதமர் மகாதிர் முகமது தலைமையில் புதிய அரசு அமைந்தது. ஆனால், கூட்டணியிலிருந்து சில கட்சிகள் வெளியேறியதால் மகாதிர் அரசு 2020-ஆம் ஆண்டு கவிழ்ந்தது.

அதற்குப் பதிலாக, மலேசிய ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவர் முஹைதீன் யாசின் தலைமையில் புதிய அரசு அமைந்தது.

எனினும், அந்த அரசுக்கும் உம்னோ கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொண்டதால் முஹைதீன் ஆட்சி 17 மாதங்களில் கவிழ்ந்தது. அதன் பின்னர் , ஆளும் கூட்டணியில் அதிக இடங்களை வைத்திருக்கும் உம்னோ கட்சி சார்பில் சாப்ரி யாகூபை இடைக்காலப் பிரதமராகக் கொண்டு புதிய அரசு அமைக்கப்பட்டது. எனினும், அவரது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லை.

இச் சூழலில், புதிதாக தேர்தல் நடத்தி பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் நோக்கில் பாராளுமன்றத்தின் ஆயுள் காலம் முடிவதற்கு 6 மாதங்களுக்கு முன்னரே அதனை பிரதமர் சாப்ரி யாகூப் கடந்த மாதம் கலைத்தார். அதன்படி, 222 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கும், மூன்று மாகாண பேரவைகளுக்கும் வாக்குப் பதிவு நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு தொடங்கியது. 2.1 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.



வடகொரியா

## மகளுடன் முதன் முறையாக

இதுவரை காலமும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன்னின் ( Kim Jong-un) குடும்பத்தினர் குறித்த விவரத்தை அந்நாட்டு அரசு ரகசியமாக வைத்திருந்தது.

இந்நிலையில் அண்மையில்அந்நாட்டில் இடம்பெற்ற கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணை சோதனையினை கிம் ஜொங் உன் தனது மகளுடன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சவுதி

## ரூ.2,93,000 கோடி செலவில் மிதக்கும் ஆமை



சவுதி அரேபியாவில், 2,93,000 கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்டமான “ஆமை” வடிவிலான மிதக்கும் நகரமொன்று உருவாக்கப்படவுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த லஸ்ஸாரினி என்ற கட்டுமான நிறுவனமே அடுத்த 8 ஆண்டுகளில் கட்டி முடிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 1,800 அடி நீளமும், 2,000 அடி அகலமும் கொண்ட படகில் மால்கள், பூங்கா, பீச் கிளஃப், அடுக்குமாடி குடியிருப்புகள் என சகல வசதிகளுடன் குறித்த நகரம் உருவாக்கப்படவுள்ளது.

இந்நகருக்கு பாஞ்சியோஸ் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வீழ்த்திய இந்தியா




நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியானது மழையால் கைவிடப்பட்ட நிலையில், மௌன்ட் மகட்டரேயில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, சூரியகுமார் யாதவ்வின் ஆட்டமிழக்காத 111 (51) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. இறுதி ஓவரின் மூன்றாம், நான்காம், ஐந்தாம் பந்துகளில் பதிலணித்தலைவர் ஹர்டிக் பாண்டியா, தீபக் ஹூடா, வொஷிங்டன் சுந்தரின் விக்கெட்டுகளைக் கைப்பற்றிய டிம் சௌதி, ஹட்-ட்ரிக் சாதனையைப் படைத்தார்.

பதிலுக்கு 192 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, ஆரம்பத்திலிருந்தே புவ்னேஷ்வர் குமார், வொஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சஹால் (2), தீபக் ஹூடா (4), மொஹமட் சிராஜ்ஜிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களையே பெற்று 65 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், வில்லியம்ஸன் 61 (52) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவானார்.



## உலகக் கிண்ணத்திலிருந்து பென்ஸீமா விலகல்

கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரிலிருந்து பிரான்ஸின் முன்களவீரரான கரிம் பென்ஸீமா விலகியுள்ளார்.

கட்டார் தலைநகர் டோஹாவில் நேற்று முன்தினம் பயிற்சியின்போது இடது தொடையில் காயமடைந்ததைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத் தொடரிலிருந்து பென்ஸீமா விலகியுள்ளதாக பிரான்ஸ் கால்பந்தாட்ட சம்மேளனம் உறுதிப்படுத்தியுள்ளது.

பயிற்சியின் இறுதியில் ஓடும்போதே பென்ஸீமாவுக்கு தொடையில் பலத்த நோவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்த எம்.ஆர்.ஐ ஸ்கானிலேயே பென்ஸீமா குணமாக மூன்று வாரங்கள் தேவை என தெரியவந்துள்ளது.

பிரான்ஸ் குழாமில் தற்போது கிலியான் மப்பே, அந்தோனி கிறீஸ்மன், ஒலிவியர் ஜிரூட், மார்க்கஸ் துராம், உஸ்மான் டெம்பிலி ஆகியோர் முன்களவீரர்களாகக் காணப்படுகின்றனர்.



## கராத்தே போட்டியில் திருகோணமலை வீரர்கள் சாதனை

ஒலுமுதீன் கியாஸ்

ஜப்பான் கராத்தே இலங்கை சங்கத்தால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட கராத்தே தொடரில் மொத்தம் 28 பதக்கங்களை பெற்று திருகோணமலை மாவட்ட வீரர்கள் சாதனைகளை படைத்துள்ளனர்.

அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற இந்த போட்டியில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 58 கராத்தே வீர, வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர்.

இதில் ஐந்து தங்கப் பதக்கங்களும், 10 வெள்ளிப் பதக்கங்களும் 13 வெண்கலப் பதக்கங்களுமாக மொத்தம் 28 பதக்கங்களை திருகோணமலை மாவட்டத்துக்கு வீரர்கள் பெற்றுத் தந்துள்ளனர் என இவர்களைப் பயிற்றுவித்த கராத்தே ஆசிரியர் ரா. சத்தியராஜன் தெரிவித்தார்.




தேசிய மட்டத்தில்

## டென்னிஸில் சாதனை படைந்த யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு

எஸ். நிதர்ஷன்

தேசிய மட்டத்தில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது சாதனை மாணவர்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்தியங்களுடன் பாடசாலையின் முன்பக்கத்திலிருந்து வீதி வழியாக நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் தேவாரம் இசைக்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பாடசாலையின் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்குகு வருகைதந்த விருந்தினர்களால் சாதனை மாணவர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது சாதனை படைத்த மாணவர்களுக்கு பயிற்சி வழங்கிய பயிற்சியாளர்களும் மற்றும் நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தவர்களும் பாடசாலையின் அதிபரினால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 21 நவம்பர் 2022, இல. 8, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.